**நடப்பு நிகழ்வுகள் – 01 பிப்ரவரி 2017**

**தமிழகம்**

1.சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் 10 மற்றும் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வில் 100 சதவீத தேர்ச்சி இலக்கை அடைய "ஸ்பார்க்" என்ற திட்டத்தை மாநகராட்சி நிர்வாகம் தொடங்கியுள்ளது.

**இந்தியா**

1.ராஜஸ்தான் மாநிலத்தில் கழிவறையைப் பயன்படுத்தும் பொதுமக்களுக்கு மாதம் 2,500 ரூபாய் ஊக்கத் தொகை கிடைக்கும் வகையிலான திட்டம் நேற்று தொடங்கப்பட்டுள்ளது.

2.மருத்துவ படிப்பிற்கான நீட் நுழைவுத் தேர்வு மே 7-ம் தேதி நடைபெறும் என சிபிஎஸ்சி நேற்று அறிவித்துள்ளது.

**உலகம்**

1.அமெரிக்க நாடாளுமன்றத்தில் "சூரிய நமஸ்கார் யஜ்னா"வுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

2.அமெரிக்க அதிபர் அலுவலகத்தில் பிரத்தியேக சட்ட ஆலோசனைக் குழு செயல்பட்டு வருகிறது. மூத்த வழக்குரைஞரான டொனால்ட் மெக்கான் அந்தக் குழுவிற்குத் தலைமை வகித்து வருகிறார்.அந்தக் குழுவில் சட்ட அமலாக்கம், சட்ட ஒழுங்குப் பிரிவுக்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த உத்தம் தில்லன் நியமிக்கப்பட்டதாக அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார்.

**விளையாட்டு**

1.இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தை (பிசிசிஐ) நிர்வகிப்பதற்கு முன்னாள் தலைமை கணக்கு தணிக்கை அதிகாரி (சிஏஜி) வினோத் ராய் தலைமையில் 4 பேர் கொண்ட குழுவை உச்ச நீதிமன்றம் நியமித்துள்ளது.மேலும் இந்தக் குழுவில் வினோத் ராய் தவிர, வரலாற்று ஆய்வாளரும், கிரிக்கெட் எழுத்தாளருமான ராமச்சந்திர குஹா, ஐடிஎ.ஃப்சி (உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி நிறுவனம்) நிர்வாக இயக்குநர் விக்ரம் லிமாயே, இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் டயானா எடுல்ஜி ஆகியோரை உச்ச நீதிமன்றம் நியமித்துள்ளது.

2.தொழில்முறை குத்துச்சண்டை வீராங்கனையாக உருவெடுத்துள்ள இந்தியாவின் சரிதா தேவி, தனது முதல் போட்டியில் ஹங்கேரியின் சோபியா பீடோவை வீழ்த்தினார்.

3.பார்வையற்றோருக்கான உலகக் கோப்பை டி20 கிரிக்கெட் போட்டிகள் புதுடெல்லியில் கடந்த 30 ஜனவரி 2017-ல் தொடங்கியது.இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், வங்கதேசம், தென் ஆப்பிரிக்கா உள்ளிட்ட 10 அணிகள் இந்த போட்டியில் கலந்துகொள்கின்றன.இந்த போட்டிகளின் நல்லெண்ண தூதராக ராகுல் டிராவிட் நியமிக்கப்பட்டுள்ளார்.

**இன்றைய தினம்**

1.உலகின் மிகப்பெரிய தொடருந்து நிலையம் Grand Central Terminal நியூயார்க் நகரில் திறக்கப்பட்ட நாள் 01 பிப்ரவரி 1913.

2.கொலம்பியா விண்ணோடம் பூமியின் வளிமண்டலத்தினுள் வெடித்துச் சிதறியதில் இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா உட்பட ஏழு பேர் கொல்லப்பட்ட நாள் 01 பிப்ரவரி 2003.

3.கனடா சமப்பால் திருமணத்தை சட்டபூர்வமாக்கிய நான்காவது நாடான நாள் 01 பிப்ரவரி 2005.

4.இன்று இந்திய-அமெரிக்க விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா இறந்த நாள்.இவர் இறந்த தேதி 01 பிப்ரவரி 2003.

**நடப்பு நிகழ்வுகள் – 02 பிப்ரவரி 2017**

**இந்தியா**

1.பாராளுமன்றத்தில் நேற்று மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.முதல் முறையாக பொது பட்ஜெட்டுடன் ரெயில்வே பட்ஜெட்டும் இணைத்து ஒரே பட்ஜெட்டாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.இது அருண் ஜெட்லி தாக்கல் செய்யும் 4 வது பட்ஜெட் ஆகும்.

**உலகம்**

1.அதிபர் டொனால்ட் டிரம்ப் அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பழமைவாதக் கொள்கையைக் கொண்ட நீல் கோர்ஸச்சை (49), நியமித்துள்ளார்.

2.அமெரிக்காவின் வெளியுறவுத்துறை மந்திரியாக எண்ணெய் நிறுவன தலைவரான ரெக்ஸ் டில்லர்சன் (64), பொறுப்பேற்க உள்ளார். இவரது நியமனத்தை செனட் சபை உறுதி செய்துள்ளது.

**வர்த்தகம்**

1.ரொக்கமற்ற பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் விதமாக ஸ்வைப்பிங் மெஷின்கள் மீதான அனைத்து வரிகளும் ரத்து செய்யப்படுவதாக பட்ஜெட்டில் மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்துள்ளார்.

**விளையாட்டு**

1.மேற்கிந்திய கிரிக்கெட் வீரர் ஆண்ட்ரே ரஸல் ஊக்க மருந்து தொடர்புடைய விவகாரத்தில் அவருக்கு ஒருவருடம் தடை விதிக்கப்பட்டுள்ளது.ஜனவரி 31, 2017 முதல் ஜனவரி 30, 2018 வரையுள்ள தடைக்காலத்தில் ரஸலால் கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்ளமுடியாது.

2.இங்கிலாந்துக்கு எதிராக நேற்று நடைபெற்ற கடைசி 20 ஓவர் போட்டியில் இந்திய அணி இங்கிலாந்து அணியை 75 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி டி20 தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. மூன்றாவது 20 ஓவர் போட்டியில் யுஸ்வேந்திர சஹா 25 ரன் கொடுத்து 6 விக்கெட் கைப்பற்றி சாதனை படைத்துள்ளார். இதற்கு முன்பு இந்திய வீரர்களில் அஸ்வின் 8 ரன் கொடுத்து 4 விக்கெட் எடுத்ததே சிறந்த நிலையாக இருந்து வந்தது.தற்போது இந்த சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் இது 3-வது சிறந்த நிலையாகும்.இலங்கை வீரர் அஜந்தா மெண்டீஸ் முதல் மற்றும் இரண்டாவது

இடத்தைப் பிடித்துள்ளார்.யுஸ்வேந்திரா சாஹலுக்கு ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருது வழங்கப்பட்டது.

**<u>இன்றைய தினம்</u>**

**<u>1.இன்று உலக சதுப்பு நில நாள் (World Wetland Day).</u>**

பிப்ரவரி மாதம் 2 அன்று 1971ஆம் ஆண்டில் ஈரான் நாட்டின் கரீபியன் கடற்பகுதியில் ராம்சர் என்னுமிடத்தில் ஈரநிலங்களைப் பாதுகாத்தல் சம்பந்தமாக ஒரு மாநாடு நடைபெற்றது. ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கான தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஈரநிலங்களைப் பாதுகாப்பதன் மூலம் பல்லுயிர் வளங்கள் மற்றும் கலாச்சாரம் பாதுகாக்கப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டே பிப்ரவரி 2 அன்று இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

2.ஜெர்மனி நாடாளுமன்றத்தை ஹிட்லர் கலைத்த நாள் 02 பிப்ரவரி 1933.

3.கலிபோர்னியாவில் தங்கம் தேடுவதற்காக சீனர்கள் கப்பலில் சான் பிரான்சிஸ்கோ வந்திறங்கிய நாள் 02 பிப்ரவரி 1848.

4.முதலாவது மின்சார வீதி விளக்குகள் இந்தியானாவில் நிறுவப்பட்ட நாள் 02 பிப்ரவரி 1880.

5.செய்மதித் தொலைக்காட்சிச் சேவை ஸ்கை தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்ட நாள் 02 பிப்ரவரி 1989.

**நடப்பு நிகழ்வுகள் – 03 பிப்ரவரி 2017**

**<u>இந்தியா</u>**

1.எல்லை பாதுகாப்பு படை வீரர் தேஜ் பகதூர் யாதவ் விருப்ப ஓய்வு கோரி விண்ணப்பித்திருந்தார்.ஆனால், அவரது கோரிக்கையை எல்லை பாதுகாப்பு படை நிராகரித்துவிட்டது.தேஜ் பகதூர் யாதவ் சில நாட்களுக்கு முன்பு தங்களுக்கு அரசு வழங்கிய உணவு பொருட்களை உயர் அதிகாரிகள் வெளியில் விற்று விட்டு தரம் குறைந்த அரைகுறை உணவு வழங்கி வருவதாக சமூக வலைத்தளத்தில் வீடியோ வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

2.வருமானவரி கணக்கை குறிப்பிட்ட காலத்திற்குள் தாக்கல் செய்ய தவறினால் ரூ.10 ஆயிரம் வரை அபராதம் விதிக்கலாம் என்று மத்திய பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3.வரும் டிசம்பருக்குள் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யாத அரசியல் கட்சிகளின் வருமான வரிவிலக்கு சலுகை ரத்து செய்யப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4.தமிழக அரசு கொண்டு வந்த ஜல்லிக்கட்டு சட்டம் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஒப்புதலுக்கு பின் அரசிதழில் வெளியிடப்பட்டது.

5.இந்தியாவில் உள்ள கல்வி நிறுவனங்களின் தொழில்நுட்ப கல்வித்தரத்தை மேம்படுத்தும் வகையில் சுமார் 201.50 மில்லியன் (இந்திய மதிப்பில் சுமார் 1400 கோடி ரூபாய்) அமெரிக்க டாலர் மதிப்பிலான ஒப்பந்தம் உலக வங்கியுடன் கையெழுத்தாகியுள்ளது.

6.முன்னாள் மத்திய மந்திரி அகமதுவின் (78) உடல் அவரது சொந்த ஊரான கேரள மாநிலம் கண்ணூரில் நேற்று முழு அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.முன்னதாக கடந்த ஜனவரி 31-ம் தேதி பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் போது திடீரென மயங்கி விழுந்தார்.டெல்லியில் உள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் மாரடைப்பு காரணமாக கடந்த பிப்ரவரி 1-ம் தேதி அதிகாலையில் மரணம் அடைந்தார்.இதையடுத்து அவரது உடல் நேற்று அடக்கம் செய்யப்பட்டது.

**<u>உலகம்</u>**

1.பாகிஸ்தான், சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளில் இருந்து அகதிகளாக வருவோருக்கு விசாவை நிறுத்தி வைத்து குவைத் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

**<u>இன்றைய தினம்</u>**

1.சோவியத் விண்கலம் லூனா 9 சந்திரனில் தரையிறங்கிய முதலாவது விண்கலம் என்ற பெருமையைப் பெற்ற நாள் 03 பிப்ரவரி 1966.

2.ஐக்கிய அமெரிக்காவின் விடுதலையை ஸ்பெயின் அங்கீகரித்த நாள் 03 பிப்ரவரி 1783.

3.வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்ட நாள் 03 பிப்ரவரி 1930.

4.சாலஞ்சர் விண்ணோடத்தில் சென்ற விண்வெளி வீரர்கள் புரூஸ் மக்காண்ட்லெஸ், ராபர்ட் ஸ்டுவேர்ட் ஆகியோர் முதன் முதலாக விண்வெளியில் சுயாதீனமான நிலையில் நடந்து சாதனை படைத்த நாள் 03 பிப்ரவரி 1984.

5.இன்று தமிழகத்தின் 7வது முதலமைச்சர், எழுத்தாளர்,தென்னாட்டு பெர்னாட்ஷா அண்ணாவின் 46-வது நினைவு நாள்.இவர் இறந்த தேதி 03 பிப்ரவரி 1969.

**நடப்பு நிகழ்வுகள் – 04 பிப்ரவரி 2017**

**<u>தமிழகம்</u>**

1.தமிழக அரசின் சார்பில் கடந்த ஜனவரி 26-ம் தேதி சென்னை கடற்கரை சாலையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம் உள்பட பல்வேறு பதக்கங்களை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வழங்கினார்.பதக்கங்களை பெற்றவர்களின் விபரங்கள்:

1.வீரதீர செயலுக்கான அண்ணா பதக்கம் – வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டைச் சேர்ந்த வி.துர்காதேவிக்கு வழங்கப்பட்டது.

2.மத நல்லிணக்கத்துக்கான கோட்டை அமீர் விருது – வேலூரைச் சேர்ந்த மருத்துவர் அ.மு.இக்ரம்க்கு வழங்கப்பட்டது.

3.வேளாண் விருது – நெல்லை மாவட்டம் புளியங்குடியைச் சேர்ந்த ம.சங்கரநாராயணன்க்கு வழங்கப்பட்டது.

உத்தமர் காந்தியடிகள் பதக்கங்களை பெற்றவர்களின் விபரங்கள்:

01) நாகை மதுவிலக்கு அமல்பிரிவு ஏடிஎஸ்பி பி.தங்கதுரை,

02) சென்னை மத்திய புலனாய்வுப் பிரிவு டிஎஸ்பி கே.ஜீவானந்தம்,

03) அடையாறு மதுவிலக்கு பிரிவு ஆய்வாளர் இ.வேலு,

04) நாகை மத்திய புலனாய்வுப் பிரிவு எஸ்ஐ கே.ரமேஷ்குமார்,

05)தருமபுரி மாவட்டம் தொப்பூர் எஸ்எஸ்ஐ வி.மாதப்பன்.

**<u>இந்தியா</u>**

**1.**டெல்லியில் கடந்த ஜனவரி 26-ம் தேதி நடைபெற்ற குடியரசு தின விழாவில் அசோக சக்ரா விருது,உத்தம் யுத் சேவா விருது,ஷாவ்ரிய சக்ரா விருது மற்றும் கீர்த்தி சக்ரா விருதை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வழங்கினார்.பதக்கங்களை பெற்றவர்களின் விபரங்கள்:

அசோக சக்ரா விருது பெற்றவர்களின் விபரங்கள்:

1. ஹவில்தார் ஹங்பான் தாதா (இவர் இந்திய ராணுவத்தின் அசாம் ரெஜிமெண்டில் பணியாற்றினார், இறப்புக்கு பிறகு இவ்விருது இவருக்கு வழங்கப்பட்டது).

[ இந்த விருதினை ஹவில்தாரின் மனைவியான சேஸன் லாவாங்குவிடம் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வழங்கியுள்ளார் ].

கீர்த்தி சக்ரா விருது பெற்றவர்களின் விபரங்கள்:

1. மேஜர் ரோகித் சூரி – 4ஆம் பிரிவு (சிறப்பு அதிரடிப்படை)
2. ஹவில்தார் பிரேம் பகதூர் – கூர்க்கா பிரிவு (இறப்புக்கு பிறகு வழங்கப்பட்டது).

உத்தம் யுத் சேவா விருது பெற்றவர்களின் விபரங்கள்:

1. ஷ்ரவண் குமார்
2. ராஜேந்திர ராம்ராவ் நிம்போர்கர்.
3. சதீஷ் துவா
4. தேவராஜ் அன்பு
5. அபய் கிருஷ்ணா

(இவர்கள் 5 பேரும் லெப்டினன்ட் ஜெனரல்கள் ஆவர்.)

ஷாவ்ரிய சக்ரா விருது பெற்றவர்களின் விபரங்கள்:

1. லெப்டினன்ட் கர்னல் அதுல் குப்தா, மகார்.
2. மேஜர் டி.வினய் ரெட்டி, சென்னை.
3. மேஜர் ரஜத் சந்திரா (4-வது பிரிவு – சிறப்பு அதிரடிப்படை)
4. மேஜர் தீபக் குமார் உபாத்யாயா (9-வது பிரிவு – சிறப்பு அதிரடிப்படை)
5. கேப்டன் அசுடோஷ் குமார் (4-வது பிரிவு- சிறப்பு அதிரடிப்படை )
6. கேப்டன் ஆசிக் -கூர்க்கா பிரிவு.
7. சுபேதார் விஜய்குமார்- (4-வது பிரிவு சிறப்பு அதிரடிப்படை)
8. ஹவில்தார் ஹனுமன் ராம் சரண்.
9. நாயக் கவாடே பாண்டுரங் மகாதேவ் (இறப்புக்கு பின்பு)

10. அப்துல் கயூம் (9-வது பிரிவு சிறப்பு அதிரடிப்படை)

2.வருமான வரித்துறை உயர் மதிப்புடைய நோட்டுகள் செல்லாது என அறிவிக்கப்பட்ட பின்பு , வங்கிகளில் செலுத்தப்பட்ட தொகைகளில் உள்ள கருப்பு பணத்தை கண்டுபிடிக்க Operation Clean Money என்னும் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றது.

3.டாக்டர்.விஜய் பாண்டுரங் பட்கர் நாளந்தா பலகலைக்கழக வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.இவர் இந்தியாவின் சூப்பர் கம்ப்யூட்டர்களான பரம் வரிசை கம்ப்யூட்டர்கள் உருவாக்கத்தில் பெரும் பங்கு வகித்தவர் ஆவார்.

4.26 ஜனவரி 2017ல் கொண்டாடப்பட்ட 68வது குடியரசு தின விழாவின் கருப்பொருள்கள் (Themes) – திறன் இந்தியா மற்றும் பெண் குழந்தைகளை காப்போம் , பெண் குழந்தைகளுக்கு கல்வி வழங்குவோம் (Skill India & Beti Bachao Beti Padhao).

**<u>வர்த்தகம்</u>**

1.உலகின் முன்னணி பங்குச் சந்தைகளுள் ஒன்றான தேசிய பங்குச் சந்தையின் (என்.எஸ்.இ.) புதிய தலைமைச் செயல் அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநராக விக்ரம் மாயே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.முன்னதாக தலைமைப் பொறுப்பில் இருந்த சித்ரா ராமகிருஷ்ணா திடீரென பதவி விலகினார்.இதையடுத்து விக்ரம் மாயே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**<u>விளையாட்டு</u>**

1.ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் இந்திய வீரர்களை தயார்ப்படுத்துவதற்கும், அவர்களுக்கு சிறந்த பயிற்சிகளை அளிப்பதற்கும் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகம் 10 பேர் கொண்ட சிறப்புக்குழுவை அமைத்துள்ளது.கடந்த 2012 ஒலிம்பிக்கில் துப்பாக்கி சூட்டில் தங்கம் வென்ற அபினவ் பிந்த்ரா,இக்குழுவிற்கு தலைவராக பணியாற்றுவார்.P.T. உஷா,பிரகாஷ் படுகோனே, கர்ணம் மல்லேஸ்வரி உள்ளிட்ட 9 பேர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2.ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கிரிக்கெட் நடுவரான லூ ரோவன் (91), சிட்னியில் நேற்று காலமானார்.

**<u>இன்றைய தினம்</u>**

**<u>1.இன்று உலகப் புற்றுநோய் தினம் (World Cancer Day).</u>**

உலகளவில் புற்றுநோய் ஒழிப்பிற்கான ஒரு மாநாடு பாரிஸ் நகரில் 2000ஆம் ஆண்டு பிப்ரவரி 4 இல் நடைபெற்றது. இம்மாநாட்டில் உலகில் புற்றுநோயை ஒழிப்பது என ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கல்வி, விழிப்புணர்வு மூலமாக புற்றுநோய் ஏற்படாமல் தடுப்பது மற்றும் சிகிச்சைமுறை போன்றவற்றை சமூகத்திற்கு போதிப்பது என்கின்ற குறிக்கோளின் அடிப்படையில் இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

2.பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவராக யாசர் அரபாத் பதவியேற்ற நாள் 04 பிப்ரவரி 1969.

3.இன்று இலங்கை விடுதலை அடைந்த நாள்.விடுதலை அடைந்த தேதி 04 பிப்ரவரி 1948.
4.ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது அதிபராக ஜார்ஜ் வாஷிங்டன் தேர்வு செய்யப்பட்ட நாள் 04 பிப்ரவரி 1789.
5.இலங்கையின் ஆங்கிலப் பத்திரிகை சிலோன் ஒப்சேர்வர் முதன் முதலாக வெளியிடப்பட்ட நாள் 04 பிப்ரவரி 1834.
6.ஒலியை மிஞ்சிய வேகத்தில் செல்லும் ரஷ்ய-இந்திய “பிரமாஸ்” ஏவுகணை ஒரிசா ஏவுதளத்தில் இருந்து வெற்றிகரமாக ஏவப்பட்ட நாள் 04 பிப்ரவரி 2007.

**நடப்பு நிகழ்வுகள் – 05 பிப்ரவரி 2017**

**தமிழகம்**

1.சென்னை மெரினாவில் பிறப்பிக்கப்பட்டிருந்த 144 தடை உத்தரவு திரும்ப பெறப்படுவதாக காவல் துறை ஆணையர் ஜார்ஜ் அறிவித்துள்ளார்.
2.புதுச்சேரியில் மே மாதம் 1ம் தேதி முதல் ஹெல்மெட் கட்டாயமாக்கப்படுவதாக புதுச்சேரி முதல்வர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

**இந்தியா**

1.மருத்துவ படிப்புக்கான நீட் தேர்வை மூன்று முறை மட்டுமே எழுத முடியும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.மேலும் தேர்வு எழுதுவதற்கான அதிகபட்ச வயது வரம்பு 25 என்று மத்திய சுகாதார அமைச்சகம் நிர்ணயம் செய்துள்ளது.இட ஒதுக்கீடு பிரிவினருக்கு 5 ஆண்டு வயது தளர்வு அளிக்கப்படும். எனவே, அவர்களுக்கான வயது வரம்பு 30 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
2.பஞ்சாப் மற்றும் கோவா மாநிலங்களில் வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது.இதில் கோவாவில் 83 சதவீத வாக்குகளும்,பஞ்சாப் மாநிலத்தில் 75 சதவீத வாக்குகளும் பதிவாகின.

**உலகம்**

1.ஆப்பிரிக்க யூனியன் அமைப்பில் 33 ஆண்டுகளுக்குப் பிறகு வடக்கு ஆப்பிரிக்காவைச் சேர்ந்த மொராக்கோ குடியரசு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.
2.முதல் வட கிழக்கு முதலீட்டாளர்கள் மாநாடு ஷில்லாங்கில் ஜனவரி 29 மற்றும் ஜனவரி 30-ம் தேதி நடைபெற்றது.

**விளையாட்டு**

1.இந்தியாவில் முதல் முறையாக கொல்கத்தா அருகே Rajarhat நகரில் பல்வேறு விளையாட்டுகளை உள்ளடக்கிய அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டுள்ளது.ஏற்கெனவே புனே மற்றும் சென்னையில் கிரிக்கெட் அருங்காட்சியகம் உள்ளது குறிப்பிடதக்கது.

**இன்றைய தினம்**

1.அப்பல்லோ 14 விண்கலம் அலன் ஷெப்பர்ட், எட்கார் மிட்ச்செல் ஆகியோருடன் சந்திரனில் தரையிறங்கிய நாள் 05 பிப்ரவரி 1971.

2.உருசியாவின் சென் பீட்டர்ஸ்பர்க் நகரில் ஏர்மிட்டேச் அருங்காட்சியகம் பொது மக்களுக்குத் திறந்து விடப்பட்ட நாள் 05 பிப்ரவரி 1852.
3.ரஷ்ய மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகம் மாஸ்கோவில் ஆரம்பிக்கப்பட்ட நாள் 05 பிப்ரவரி 1960.

**நடப்பு நிகழ்வுகள் – 06 பிப்ரவரி 2017**

**தமிழகம்**

1.சென்னையில் நேற்று நடைபெற்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில், கட்சியின் சட்டமன்றக் கட்சி தலைவராக சசிகலா ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**இந்தியா**

1.முஸ்லிம் சமுதாயத்தினர் ஹஜ் யாத்திரை பயணம் மேற்கொள்வதற்கு வழங்கப்படும் மானியம் குறித்து ஆய்வு செய்வதற்காக மத்திய அரசு குழு ஒன்றை அமைத்துள்ளது.இந்த குழுவின் அமைப்பாளராக ஜெட்டா துணை தூதரகத்தின் முன்னாள் இந்தியத் தூதர் அஃப்ஸல் அமானுல்லா நியமிக்கப்பட்டுள்ளார்.

**உலகம்**

1.2020-ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டியின் தூதராக அனிமேசன் கதாபாத்திரம் Son Goku தேர்வு செய்யப்பட்டுள்ளது.
2.வங்காளதேச அரசியல் சட்ட வடிவமைப்பில் முக்கிய பங்காற்றியவரும், ஆளும் அவாமி லீக் கட்சியின் முக்கிய தலைவருமான சுரஞ்சித் சென்குப்தா(72) நேற்று காலமானார்.
3.ஹைதி நாட்டின் நாடாளுமன்றத் தேர்தலில் ஜோவ்னல் மோய்ஸ் தலைமையிலான டெட் கேல் கட்சி பெரும்பான்மையைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது.புதிய அதிபராக டெட் கேல் கட்சியின் தலைவர் ஜோவ்னல் மோய்ஸ் நாளை பதவியேற்க உள்ளார்.

**விளையாட்டு**

1.ஹரியாணா மாநிலம் மனேசரில் நடைபெற்ற தேசிய டேபிள் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் இறுதிச் சுற்றில் தமிழக வீரரான சரத் கமல் 11-8, 6-11, 11-9, 3-11, 11-8, 11-5 என்ற செட் கணக்கில் சௌம்யஜித் கோஷை தோற்கடித்து சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.மகளிர் ஒற்றையர் இறுதிச் சுற்றில் மதுரிகா 11-5, 11-9, 11-5, 12-10 என்ற நேர் செட்களில் 6 முறை தேசிய சாம்பியன் பட்டம் வென்றவரான பௌலமி கடக்கை தோற்கடித்து சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.ஆடவர் இரட்டையர் இறுதிச்சுற்றில் சௌம்யஜித் கோஷ்-ஜுபின் குமார் ஜோடி 11-3, 7-11, 11-6, 8-11, 11-5 என்ற செட் கணக்கில் சுஷ்மித் ஸ்ரீராம்-அனிருபன் கோஷ் ஜோடியை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றனர்.மகளிர் இரட்டையர் பிரிவில் அனிந்திதா சக்ரவர்த்தி-சுத்ரிதா முகர்ஜி ஜோடி 11-8, 11-8, 4-11, 11-3 என்ற நேர் செட் கணக்கில் போலோமி கடக்-மௌதா தாஸ் ஜோடியை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றனர்.கலப்பு இரட்டையர் பிரிவில் அர்ஜுன் கோஷ்-சுத்ரிதா முகர்ஜி ஜோடி 11-9, 11-5, 11-9 என்ற நேர் செட்களில் சனில் ஷெட்டி-பூஜா

சஹஸ்ராபுதே ஜோடியை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றனர்.

**இன்றைய தினம்**

**1.இன்று பெண் இனப்பெருக்கத்தை அழிப்பதை ஒழிக்கும் சர்வதேச தினம் (International Day of Zero Tolerance to Female Genital Mutilation).**

பெண் பிறப்புறுப்பு சிதைப்புடன் சுமார் 125 மில்லியன் பெண் குழந்தைகள் மற்றும் பெண்கள் ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு போன்ற 29 நாடுகளில் வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர். இது பெண்களுக்கு எதிரான தீவிர பாகுபாடாகும். இது சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற இழிவான சிகிச்சையாகும். இதனை ஒழித்திட, விழிப்புணர்வு ஏற்படுத்திட 2012 இல் ஐ.நா. சபை இத்தினத்தை அறிவித்தது.

2.ஸ்டாம்ஃபோர்ட் ராஃபில்ஸ் என்பவரால் சிங்கப்பூர் அமைக்கப்பட்ட நாள் 05 பிப்ரவரி 1819.

3.சிலோன் பேட்ரியட் (The Ceylon Patriot) இதழ் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட நாள் 05 பிப்ரவரி 1863.

4.கண்டம் விட்டுக் கண்டம் பாயும் முதலாவது டைட்டான் ஏவுகணை புளோரிடாவில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்ட நாள் 05 பிப்ரவரி 1959.

5.டார்ஜா ஹலோனென் பின்லாந்தின் முதல் பெண் அதிபரான நாள் 05 பிப்ரவரி 2000.

**நடப்பு நிகழ்வுகள் – 07 பிப்ரவரி 2017**

**தமிழகம்**

1.தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் முதல்வர் பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார்.தனது விலகல் கடிதத்தை பொறுப்பு ஆளுநர் வித்யாசாகர் ராவுக்கு ஓ.பன்னீர் செல்வம் அனுப்பி வைத்துள்ளார்.தான் தனிப்பட்ட காரணங்களுக்காகவே தனது பதவியை ராஜினாமா செய்வதாக ஓ. பன்னீர்செல்வம் குறிப்பிட்டுள்ளார்.

**இந்தியா**

1.உத்திர பிரதேசத்தில் சட்டமன்ற தேர்தலில் 46 சட்டசபை தொகுதிகளின் வாக்களர் பட்டியல் உருது மொழியிலும் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த தொகுதிகளில் உருது பேசும் மக்கள் பெரும்பான்மையாக வசித்து வருகின்றனர்.இந்தியாவில் இதுபோன்று உருது மொழியில் வாக்களர் பட்டியல் வெளியிடப்படுவது இதுவே முதல் முறை ஆகும்.

2.2015 செப்டம்பர் 28ல் PSLV -XL ராக்கெட் மூலம் ஏவப்பட்ட இந்தியாவின் முதல் விண்வெளி ஆய்வு செயற்கைகோள் ஆஸ்ட்ரோசாட் (Astrosat) 600 கோடி வயதான Blue Straggler என்ற நட்சத்திரத்தை படம் பிடித்துள்ளது.இந்த நட்சத்திரம் அழியும் நிலையில் உள்ள பெரிய நட்சத்திரத்தில் இருந்து நிறை மற்றும் ஆற்றலை (Mass & Energy) உறுஞ்சும் திறன் கொண்டது. அவ்வாறு உறிஞ்சும் பொழுது ஆஸ்ட்ரோசாட் படம் பிடித்துள்ளது.

**விளையாட்டு**

1.இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் அணியின் கேப்டன் அலாஸ்டர் குக் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.மேலும் டெஸ்ட் போட்டியில் தொடர்ந்து விளையாட

விரும்புவதாக அவர் அறிவித்துள்ளார்.

2.ஹாங்காங்கில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்திய அணி தங்கப் பதக்கம் வென்றது.இந்திய அணி இறுதி ஆட்டத்தில் 2-0 என்ற கணக்கில் மலேசியாவை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றது.இந்திய அணி தரப்பில் முதல் போட்டியில் வேலவன் செந்தில்குமார், மலேசிய வீரர் ஓங் சாய் ஹுன்னை வீழ்த்தினார்.அடுத்த போட்டியில் இந்தியாவின் அபய் சிங் மலேசிய வீரர் டாரன் ராகுலை வென்றார். இறுதியில் 2-0 என்ற கணக்கில் மலேசியாவை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றது.

**<u>இன்றைய தினம்</u>**

1.சுவிட்சர்லாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்த நாள் 07 பிப்ரவரி 1971.

2.சார்லி சாப்ளினின் முதல் திரைப்படம் Kid Auto Races at Venice வெளியான நாள் 07 பிப்ரவரி 1914.

3.சோவியத் ஒன்றியம் சோயுஸ் 24 விண்கலத்தை இரண்டு விண்வெளி வீரர்களுடன் விண்ணுக்கு ஏவிய நாள் 07 பிப்ரவரி 1977.

**நடப்பு நிகழ்வுகள் – 08 பிப்ரவரி 2017**

**<u>தமிழகம்</u>**

1.தமிழக முதல்வரின் கூடுதல் முதன்மைச் செயலராக இருந்த சாந்த ஷீலா நாயர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

**<u>இந்தியா</u>**

1.ரூ.2.5 லட்சம் வரை வங்கியில் டெபாசிட் செய்தவர்களிடம் விசாரணை கிடையாது என்று மத்திய நேரடி வரிகள் வாரிய தலைவர் சுஷில் சந்திரா தெரிவித்துள்ளார்.

2.செல்லிடப் பேசி சந்தாதாரர்களின் அடையாளத்தை சரிபார்ப்பதற்கு ஓராண்டுக்குள் நடைமுறையை உருவாக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் கடந்த பிப்ரவரி 6-ஆம் தேதி உத்தரவு பிறப்பித்துள்ளது.

3.உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஆஸம்கர் மாவட்டத்தில் உள்ள தக்வா கிராமத்தைச் சேர்ந்த நிஜாமுதீன் கடந்த பிப்ரவரி 6-ஆம் தேதி உயிரிழந்தார்.இவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் வாகன ஓட்டுநராகவும், அவரது இந்திய தேசிய ராணுவத்தில் கர்னலாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

**<u>உலகம்</u>**

1.இங்கிலாந்து ராணியாக எலிசபெத் முடிசூடி 65 ஆண்டுகள் கடந்துள்ளது.இவர் 1952-ம் ஆண்டு பட்டத்து ராணி ஆக முடிசூட்டப்பட்டார்.தற்போது இவருக்கு 90 வயது ஆகிறது.மேலும் இவர் உலகிலேயே அதிக நாள் ராணி ஆக இருந்தவர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

**<u>வர்த்தகம்</u>**

1.டாடா சன்ஸ் குழும பங்குதாரர்கள் அளித்த வாக்குகளின் அடிப்படையில் அக்குழுமத்தின் இயக்குநர் பதவியில் இருந்து சைரஸ் மிஸ்திரி நீக்கப்பட்டுள்ளார்.

**<u>விளையாட்டு</u>**

1.ஆப்ரிக்க கோப்பைக்கான கால்பந்து போட்டி லிப்ரேவில்லி நகரில் நடைபெற்றது.இதில் இறுதி ஆட்டத்தில் கேமரூன் அணி 2-1 என்ற கோல்கணக்கில் எகிப்தை தோற்கடித்து சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

**நடப்பு நிகழ்வுகள் – 09 பிப்ரவரி 2017**

**<u>தமிழகம்</u>**

1.சமூக நலன் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு மேன்மையாக பணிபுரிந்த 18 வயதுக்கு மேற்பட்ட மகளிருக்கு ஔவையார் விருது மகளிர் தின விழாவில் தமிழக அரசால் வழங்கப்படுவது வழக்கம்.அந்த வகையில் ஔவையார் விருது பெற தங்களை பற்றிய முழு விபரங்களை “மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சிங்காரவேலர் மாளிகை, சென்னை-1” என்ற முகவரிக்கு பிப்ரவரி 15-க்குள் அனுப்பி வைக்கலாம் என சென்னை மாவட்ட ஆட்சியர் ப.மகேஸ்வரி தெரிவித்துள்ளார்.

**<u>இந்தியா</u>**

1.சிகிச்சை அளிப்பதற்கு முன்பே அதுதொடர்பான கட்டண விவரங்களை நோயாளிகளுக்கு மருத்துவர்கள் தெரிவிக்க வேண்டியது கட்டாயம் என்று நாடாளுமன்றத்தில் மத்திய அரசு கடந்த பிப்ரவரி 7-ஆம் தேதி தெரிவித்துள்ளது.

2.பொதுமக்கள் வருகின்ற 20-ஆம் தேதி முதல் தங்கள் சேமிப்பு கணக்கில் இருந்து இனி வாரம் ரூ.50 ஆயிரம் பணம் எடுக்கலாம் என்று ஆர்.பி.ஐ அறிவித்துள்ளது.

3.மகாராஷ்டிரா மாநில அரசின் சார்பில், நகர எல்லைக்கு வெளியே பொது போக்குவரத்தை மேம்படுத்த, 6 பேர் பயணிக்க கூடிய ஷிவ்கிராமின் டாக்ஸி திட்டம் (Shivgramin Taxi Scheme) தொடங்கப்பட்டுள்ளது.

**<u>விளையாட்டு</u>**

1.தில்லியில் நடைபெற்ற ஃப்ரெண்ட்ஸ் பிரீமியர் லீக் டி20 உள்நாட்டு கிரிக்கெட் போட்டிகளில் ஆட்டமிழக்காமல் 300 ரன்கள் எடுத்த உலகின் முதல் வீரர் என்ற சாதனையை தில்லியைச் சேர்ந்த மோஹித் அலாவத் (21) படைத்துள்ளார்.இவர் ஃப்ரெண்ட்ஸ் லெவன் அணிக்கு எதிராக மாவி லெவன் அணி தரப்பில் விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது.

2.பாகிஸ்தான் ஒருநாள் கிரிக்கெட் அணியின் கேப்டனாக இருந்த அசார் அலி தனது பதவியை இன்று ராஜினாமா செய்துள்ளார்.

**<u>இன்றைய தினம்</u>**

1.முதலாவது ஜப்பானியர் ஹவாய் தீவை வந்தடைந்த நாள் 09 பிப்ரவரி 1885.

2. டேவிஸ் கோப்பை டென்னிஸ் பந்தயம் ஆரம்பிக்கப்பட்ட நாள் 09 பிப்ரவரி 1900.

3.அப்பல்லோ 14 விண்கலம் மூன்று அமெரிக்கர்களுடன் பூமி திரும்பிய நாள் 09 பிப்ரவரி 1971.
4.சோயூஸ் 17 விண்கலம் பூமி திரும்பிய 09 பிப்ரவரி 1975.

**நடப்பு நிகழ்வுகள் – 10 பிப்ரவரி 2017**

**<u>தமிழகம்</u>**

1.கடந்த ஆண்டு இடைக்கால பணி நீக்கம் செய்யப்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் ஞானதேசிகன் மற்றும் அதுல் ஆனந்துக்கு மீண்டும் பணி வழங்க தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.
2.வர்தா புயலால் மூடப்பட்டிருந்த வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா பொது மக்கள் பார்வைக்கு இன்று முதல் மீண்டும் திறக்கப்படுகிறது.
3.சென்னையில் நடைபெற்ற ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டது குறித்து ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ராஜேஷ்வரன் நேற்று விசாரணையை தொடங்கினார்.
4.இரண்டு வருடங்களுக்கு பிறகு இன்று மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது. மதுரை மாவட்டம் பாலமேட்டில் நேற்று ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது.

**<u>இந்தியா</u>**

1.இன்று தேசிய குடல் புழு நீக்க தினத்தையொட்டி நாடு முழுவதும் ஒரே நாளில் 34 கோடி சிறுவர் – சிறுமியருக்கு குடல் புழு நீக்க மாத்திரைகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது.
2.தேசிய நெடுஞ்சாலைகளின் போக்குவரத்து தொடர்பான தகவல்களை வானொலி மூலம் உடனுக்குடன் ஒலிபரப்பும் வகையிலான சேவை விரைவில் தொடங்கப்பட உள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி அறிவித்துள்ளார்.
3.பெண்ணதிகாரம் குறித்து விவாதிப்பதற்கான “தேசிய மகளிர் நாடாளுமன்றம்” என்ற 3 நாள் கருத்தரங்கை பிரதமர் நரேந்திர மோடி ஆந்திரப் பிரதேசத்தின் அமராவதியில் இன்று தொடங்கி வைத்தார்.
4.வழக்கற்றுப்போன 150 ஆண்டுகால பழைமையான சட்டம் உள்பட தேவையில்லாத 105 சட்டங்களை நீக்குவதற்கு வகை செய்யும் மசோதா மக்களவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

**<u>உலகம்</u>**

1.அமெரிக்காவின் வாஷிங்டனில் அதிபர் டிரம்ப் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கணினி வன்பொருள் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்த இன்டெல் நிறுவனம் அமெரிக்காவின் அரிஸோனா மாகாணத்தில் ரூ.46,000 கோடியில் புதிய சிப் தயாரிப்பு ஆலையை தொடங்க உள்ளதாகத் தெரிவித்துள்ளது.இன்டெல் நிறுவன

தலைமை நிர்வாகி பிரையன் கிர்ஸானிச் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

2.சிரியாவில் அமெரிக்க போர் விமானங்கள் நிகழ்த்திய தாக்குதலில் அல்-காய்தா பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்த மூத்த தளபதி அபு ஹனி அல்-மாஸ்ரி கொல்லப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

3.இனிமேல் சீனாவிற்கு பயணம் செய்ய விரும்பும் வெளிநாட்டினர் அந்நாட்டிற்குள் நுழைவதற்குள் விமான நிலையத்தில் தங்களது கைரேகைகளை பதிவு செய்ய வேண்டுமென்று அந்நாட்டின் பொது பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.இந்த நடைமுறையானது முதன்முறையாக இன்று முதல் ஷென்ஸென் விமான நிலையத்தில் அமல் செய்யப்பட உள்ளது.

**விளையாட்டு**

1.சர்வதேச கால்பந்து தரவரிசையில் இந்திய அணி 130-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.ஆர்ஜென்டீனா முதலிடத்திலும், பிரேசில் இரண்டாவது இடத்திலும்,ஜெர்மனி மூன்றாவது இடத்திலும்,சிலி நான்காவது இடத்திலும்,பெல்ஜியம் ஐந்தாவது இடத்தையும் பிடித்துள்ளன.ஆசிய கால்பந்து தரவரிசையில் இந்தியா 20-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.முதல் இடத்தை ஈரான் பிடித்துள்ளது.

**இன்றைய தினம்**

1.புதுதில்லி இந்தியாவின் தலைநகரமாக்கப்பட்ட நாள் 10 பிப்ரவரி 1931.

2.தமிழகத்தின் முதல்வராக கருணாநிதி முதன்முதலாக பதவியேற்றுக் கொண்ட நாள் 10 பிப்ரவரி 1969.

3.அலன்சன் கிரென் தீயணைக்கும் கருவியின் காப்புரிமம் பெற்ற நாள் 10 பிப்ரவரி 1863.

4.சதுரங்கக் கணினி 'டீப் புளூ' உலக முதற்தரவீரர் காரி காஸ்பரோவை வென்ற நாள் 10 பிப்ரவரி 1996.

5.தகவல் தொடர்பு செயற்கைக்கோள்கள் இரிடியம் 33, காசுமசு-2251 ஆகியன விண்வெளியில் மோதி அழிந்த நாள் 10 பிப்ரவரி 2009.

**நடப்பு நிகழ்வுகள் – 11 பிப்ரவரி 2017**

**தமிழகம்**

1.சென்னையில் வாகன நிறுத்தம் இல்லாத ஹோட்டல்களை மூட வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.லோகு என்பவர் தாக்கல் செய்த பொதுநல மனுவில் உயர் நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

2.தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வரும் 27ஆம் தேதிக்குள் சீமைக் கருவேல மரங்களை அகற்ற வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

**இந்தியா**

1.2017 -19 -ஆம் ஆண்டுக்கான சீன -இந்திய ஆராய்ச்சித் திட்டத்தின் தலைவராக, சென்னை ஐஐடி உதவிப் பேராசிரியர் ஜோ தாமஸ் கரக்கட்டு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**உலகம்**

1.அமெரிக்காவின் புதிய அட்டார்னி ஜெனரலாக அலபாமா மாகாணத்தைச் சேர்ந்த ஜெப் செசன்ஸ் என்னும் செனட் சபை எம்.பி.யை டிரம்ப் நியமித்தார். ஆனால் அவரது நியமனம் பெருத்த சர்ச்சையை எழுப்பியது.எனவே வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.இந்த வாக்கெடுப்பில் ஜெப் செசன்ஸ் நியமனத்துக்கு ஆதரவாக 52 ஓட்டுகள் கிடைத்தன. எதிராக 47 ஓட்டுகள் விழுந்தன. இதனால் அவரது நியமனத்துக்கு செனட் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

2.ஓலா நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி(சிஎப்ஓ) ராஜிவ் பன்சால் மற்றும் தலைமை மார்க்கெட்டிங் அதிகாரி ரகுவேஷ் சரப் ஆகியோர் ராஜினாமா செய்துள்ளனர்.நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவர் மற்றும் ஓலா மணியின் தலைவர் பல்லவ் சிங், தற்காலிக தலைமை நிதி அதிகாரியாக இருப்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

3.நெதர்லாந்தில் உள்ள சிறைகளில் கைதிகளே இல்லாததால் கைதிகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக சிறைசாலை அகதி இல்லமாக மாற்றப்பட்டுள்ளது.

**வர்த்தகம்**

1.பங்குச்சந்தை ஒழுங்கு முறை ஆணையத்தின் (செபி) தலைவராக நிதி அமைச்சகத்தில் கூடுதல் செயலாளராக உள்ள அஜய் தியாகி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.தற்போது பங்குச்சந்தை ஒழுங்கு முறை ஆணையத்தின் (செபி) தலைவராக இருந்த யூ.கே. சின்ஹாவின் பதவிக் காலம் அடுத்த மாதம் ஒன்றாம் தேதியுடன் முடிவடைய உள்ளது.எனவே புதிய தலைவராக அஜய் தியாகி நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை நியமன குழு தியாகியின் நியமனத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.58 வயதான அஜய் தியாகி உத்திரபிரதேச மாநிலத்தை சேர்ந்தவர் ஆவார்.

2.மத்திய அரசுக்கு சொந்தமான எல்.ஐ.சி. நிறுவனத்தின் புதிய நிர்வாக இயக்குநராக ஹேமந்த் பார்கவா நியமிக்கப்பட்டுள்ளார்.இவர் தற்போது எல்.ஐ.சி. நிறுவனத்தின் தில்லி அலுவலகத்தில் மண்டல மேலாளராகப் பணியாற்றி வந்தார்.இவர் அப்பதவியில், வரும் 2019-ஆம் ஆண்டு ஜூலை 31-ஆம் தேதி வரையில் நீடிப்பார். இதற்கான ஒப்புதலை மத்திய அமைச்சரவைக் குழு வழங்கியது.

**இன்றைய தினம்**

**1.இன்று தாமஸ் ஆல்வா எடிசன் பிறந்த தினம் (Thomas Alva Edison Birth Anniversary Day).**

தாமஸ் ஆல்வா எடிசன், 1847ஆம் ஆண்டில், பிப்ரவரி 11 அன்று அமெரிக்காவில் பிறந்தார். படிக்காதமேதை, பட்டம் பெறாதவர். ஆனால் கண்டுபிடிப்புகளின் சக்கரவர்த்தியாக விளங்கினார். மிக அதிகப்படியான கண்டுபிடிப்புகளை நிகழ்த்தி உலக சாதனை

படைத்தவர். இவரின் கண்டுபிடிப்புகளுக்காக 1093 பதிவுரிமைகளைப் பெற்றார்.
2.லண்டன் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்ட நாள் 11 பிப்ரவரி 1826.
3.ராபர்ட் ஃபுல்ட்டன் நீராவிப் படகுக்கான காப்புரிமம் பெற்ற நாள் 11 பிப்ரவரி 1809.
4.தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகள் சிறைவாசத்தின் பின்னர் விடுதலையான நாள் 11 பிப்ரவரி 1990.
5.ஜெர்மனியின் முதல் 24 மணி நேரத் தமிழ் வானொலியான ஐரோப்பியத் தமிழ் வானொலி ஆரம்பிக்கப்பட்ட நாள் 11 பிப்ரவரி 2005.

**நடப்பு நிகழ்வுகள் – 12 பிப்ரவரி 2017**

**இந்தியா**

1.ஒடிசா கடற்கரையில் உள்ள அப்துல்கலாம் தீவிலிருந்து (வீலர் தீவு) நேற்று காலை 7.45 மணியளவில் எதிரிநாட்டு ஏவுகணைகளை இடைமறித்து தாக்கி அழிக்கும் வல்லமை கொண்ட ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்தது.இந்த தகவலை பாதுகாப்பு மேம்பாட்டு ஆராய்ச்சி அமைப்பு வெளியிட்டுள்ளது.
2.கர்நாடக மாநிலத்தில் கம்பளா போட்டி நடத்துவதற்காக புதிய சட்ட மசோதா கர்நாடக சட்டப்பேரவையில் கடந்த பிப்ரவரி 10-ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டது.
3.உத்தரப்பிரதேச சட்டசபைக்கான நேற்று நடந்த முதல் கட்ட தேர்தலில் 63 % வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**உலகம்**

1.இந்தியா, சீனா இடையே 1962-ல் நடந்த போரின்போது வழி தவறி இந்திய எல்லைக்குள் நுழைந்து கடந்த 50 ஆண்டுகளாக சொந்த நாட்டுக்கு திரும்ப முடியாமல் தவித்த சீன ராணுவ வீரர் வாங்கி (77) மீண்டும் அவரது குடும்பத்தினருடன் சேர்த்து வைக்கப்பட்டார். இவர் சீனாவின் சாங்ஸி மாகாணத்தில் உள்ள யூனாய் நன்கன் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் ஆவார்.
2.தடையை மீறி மீண்டும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வடகொரியா சோதனை செய்துள்ளது.அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் பதவியேற்ற பிறகு வடகொரியா சோதனை செய்யும் முதல் ஏவுகணை இதுவாகும்.வடக்கு பியோங்கன் பிராந்தியத்தில் பங்யான் ஏவுதளத்தில் இருந்து இந்த ஏவுகணை சோதனை செய்யப்பட்டது.
3.உலகிலேயே அதிக எடை கொண்ட எகிப்து தலைநகர் கெய்ரோவை சேர்ந்த பெண் எமான் அகமது (வயது 36),எடை குறைப்பு சிகிச்சைக்காக மும்பை கொண்டுவரப்பட்டார். கிரேன் உதவியுடன் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.தற்போது இவர் 500 கிலோ எடையுடன் உள்ளார்.

**இன்றைய தினம்**

**1.இன்று சார்லஸ் டார்வின் பிறந்த தினம் (Charles Darwin Birth Anniversary Day).**

பரிணாமத்தின் தந்தை எனப் போற்றப்படுவர் சார்லஸ் டார்வின் ஆவார். உயிர்கள் எப்படித் தோன்றின என்பதில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவர். விலங்குகள் மற்றும் உயிரினங்களின் பரிணாமம் என்பது இயற்கைத் தேர்வு என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்தன என்பதைக் கண்டறிந்தவர். இயற்கை விஞ்ஞானியான இவர் 1809ஆம் ஆண்டு, பிப்ரவரி 12 இல் பிறந்தார்.

**2.<u>இன்று ஆப்ரகாம் லிங்கன் பிறந்த தினம் (AbrahamLinco In Birth Day).</u>**

ஆப்ரகாம் லிங்கன் 1809ஆம் ஆண்டு பிப்ரவரி 12 இல் பிறந்தார். இவர் அமெரிக்காவின் 16ஆவது குடியரசுத் தலைவராகப் பதவி வகித்தார். ஐக்கிய அமெரிக்காவைப் பிளவுபடாமல் காக்க உள்நாட்டுப் போர் நடத்தி வெற்றி பெற்றவர். அடிமை முறையை எதிர்த்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, 1865இல் அரசியல் சட்டத்திருத்தத்தின் வழி அடிமை முறையை ஒழித்தார்.

3.இந்தியாவுக்கான தனது இரண்டாவது கடற்பயணத்தை வாஸ்கோடகாமா லிஸ்பனில் இருந்து ஆரம்பித்த நாள் 12 பிப்ரவரி 1502.

4.கலாபகசுத் தீவுகளை எக்குவாடோர் இணைத்துக் கொண்ட நாள் 12 பிப்ரவரி 1832.

5.சீனக் குடியரசில் கிரெகோரியன் நாட்காட்டி அமுலுக்கு வந்த நாள் 12 பிப்ரவரி 1912.

**நடப்பு நிகழ்வுகள் – 13 பிப்ரவரி 2017**

**<u>தமிழகம்</u>**

1.ஆசிரியர் தேர்வு வாரிய தலைவராக ஐஏஎஸ் அதிகாரி காகர்லா உஷா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த பிப்ரவரி 9-ஆம் தேதி பொறுப்பேற்றுக் கொண்டார்.

2.சென்னை உயர் நீதிமன்ற வரலாற்றில் முதல்முறையாக வீடியோ கான்பரன்சிங் மூலம் இன்று விசாரணை நடைபெற்றது. இதற்காக சென்னை உயர் நீதிமன்றம், உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வீடியோ கான்பரன்ஸ் வசதிகள் செய்யப்பட்டன.

**<u>இந்தியா</u>**

1.கோலார் தங்கவயலில் உள்ள ஐந்து ரயில் நிலையங்களின் முகப்பில் பல ஆண்டு காலமாக தமிழில் எழுதப்பட்டிருந்த ரயில் நிலையங்களின் பெயர்களை ரயில்வே நிர்வாகம் நீக்கியுள்ளது.மாரிகுப்பம், சாம்பியன், ஊரிகம், கோரமண்டல், பெமல்நகர் ஆகிய பெயர்களை ரயில்வே நிர்வாகம் நீக்கியுள்ளது.

2.ஒடிஷாவை சேர்ந்த மணல் சிற்ப கலைஞர் சுதர்சன் பட்நாயக், புரி கடற்கரையில் உலகின் மிகப்பெரிய மணல் சிற்ப கோட்டையை உருவாக்கியுள்ளார். இது கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.இந்த மணல் கோட்டை 48 அடி 8 அங்குலம் உயரம் கொண்டதாகும்.பட்நாயக்கும் அவரது 45 மாணவர்களும் இணைந்து 9 நாட்களில் இந்த பிரமாண்ட மணல் கோட்டையை உருவாக்கி உள்ளனர்.

**<u>விளையாட்டு</u>**

1.பார்வையற்றோருக்கான டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியாவில்

நடைபெற்று வந்தது. பெங்களூரில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்தியா – பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான் 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 197 ரன்கள் எடுத்தது.பின் இந்திய அணி 17.4 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 198 ரன்கள் எடுத்து 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.இதற்கு முன்பு 2007 மற்றும் 2012-ல் பாகிஸ்தானை வீழ்த்தி இந்தியா சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

2.டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் விரைவாக 250 விக்கெட்டுக்கள் கைப்பற்றி இந்திய முன்னணி சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் புதிய சாதனை படைத்துள்ளார்.இவர் நேற்று வங்காள தேசத்துக்கு எதிராக நடைபெற்ற முதல் டெஸ்டில் இரண்டாவது இன்னிங்சில் முஷ்பிகுர் ரகீம் விக்கெட்டை கைப்பற்றினார். இது அவருக்கு 250-வது விக்கெட் ஆகும்.45-வது டெஸ்டில் அவர் 250-வது விக்கெட்டை எடுத்துள்ளார்.இதற்கு முன்பு டென்னிஸ் லில்லி (ஆஸ்திரேலியா) 48 டெஸ்டில் 250 விக்கெட் எடுத்ததே சாதனையாக இருந்தது. இந்த சாதனையை அஸ்வின் தற்போது முறியடித்துள்ளார்.

**<u>இன்றைய தினம்</u>**

**<u>1.இன்று உலக வானொலி தினம் (World Radio Day).</u>**

ஐக்கிய நாடுகள் சபையில் 1946ஆம் ஆண்டு பிப்ரவரி 13 அன்று வானொலி நிறுவப்பட்டது. யுனெஸ்கோவின் 36ஆவது பொதுச்சபைக் கூட்டத்தில் 2011ஆம் ஆண்டு நவம்பர் 3 அன்று உலக வானொலி தினம் அறிவிக்கப்பட்டது. 2012ஆம் ஆண்டுமுதல் ஐ.நாவின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பான யுனெஸ்கோ பிப்ரவரி 13ஆம் தேதியை உலக வானொலி தினமாகக் கடைப்பிடிக்கிறது.

2.அண்டவெளியின் மிகப்பெரிய வைர, வெண்குறு விண்மீன் பிபிஎம் 37093 கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நாள் 13 பிப்ரவரி 2004.

3.சோவியத் நீராவிக்கப்பல் செலியூன்ஸ்கின் 111 பேருடன் ஆர்க்டிக் பெருங்கடலில் மூழ்கிய நாள் 13 பிப்ரவரி 1934.

4.பிரான்சு வெற்றிகரமாக அணுகுண்டு சோதனையை நடத்தி, அணுவாயுதங்களைக் கொண்டுள்ள 4வது நாடான நாள் 13 பிப்ரவரி 1960.

**நடப்பு நிகழ்வுகள் – 14 பிப்ரவரி 2017**

**<u>தமிழகம்</u>**

1.தமிழக அரசின் உளவுத்துறை தலைவராக டேவிட்சன் தேவாசீர்வாதம் நியமிக்கப்பட்டுள்ளார்.முன்னதாக விடுப்பில் சென்றுள்ள தமிழக உளவுத்துறை தலைவர் சத்தியமூர்த்தி ஐபிஎஸ்க்கு பதிலாக டேவிட்சன் தேவாசீர்வாதம் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

**<u>இந்தியா</u>**

1.அணு மின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, இனிமேல் 1,200 மெகாவாட் உற்பத்தித்

திறனுக்கு மேற்பட்ட வெளிநாட்டு அணு உலைகளை நிறுவ மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.

2.இந்தியாவில் ஏவுகணை தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் வகையில் எல் & டி நிறுவனம், ஐரோப்பிய பாதுகாப்புத் துறை நிறுவனமான எம்.பி.டி.ஏ. வுடன் நேற்று ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

**உலகம்**

1.இலங்கையில் உள்நாட்டுப்போர் நடைபெற்றபோது விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண தளபதியாக இருந்த கருணா அம்மான் என்ற விநாயகமூர்த்தி முரளிதரண், தமிழ் ஐக்கிய சுதந்திர கட்சி என்ற பெயரில் புதிய கட்சியை தொடங்கியுள்ளார்.

2.2016-ஆம் ஆண்டுக்கான பாஃப்டா விருது வழங்கும் நிகழ்ச்சி லண்டனில் கடந்த பிப்ரவரி 12-ஆம் தேதி நடைபெற்றது.சிறந்த துணை நடிகருக்கான விருது “லயன்” என்ற ஹாலிவுட் திரைப்படத்தில் நடித்ததற்காக இந்திய வம்சாவளி ஹாலிவுட் நடிகர் தேவ் படேலுக்கு வழங்கப்பட்டது.“லா லா லேண்ட்” என்ற திரைப்படத்துக்கு சிறந்த திரைப்படம், சிறந்த நடிகை, சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த இசையமைப்பு ஆகிய 5 பிரிவுகளின் கீழ் விருதுகள் வழங்கப்பட்டன.சிறந்த நடிகைக்கான விருது இந்த திரைப்படத்தின் கதாநாயகியான எம்மா ஸ்டோனுக்கும், சிறந்த இயக்குநருக்கான விருது டாமியன் சாப்ஸலுக்கும் வழங்கப்பட்டன.

**வணிகம்**

1.டிவிஎஸ் குழுமத்தைச் சேர்ந்த சுந்தரம் கிளேடன் நிறுவனம் அமெரிக்காவின் தெற்கு கரோலினா மாகாணத்தில் 50 ஏக்கரில் தன்னுடைய முதல் ஆலையை தொடங்க உள்ளது.இந்த ஆலை ரூ.350 கோடியில் அமைய உள்ளது.இந்நிறுவனம் சர்வதேச ஆட்டோமொபைல் நிறுவனங்களுக்கு தேவையான அலுமினிய பாகங்களை தயாரிக்கிறது.

2.என்எஸ்இ புதிய தலைமைச் செயல் அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டிருக்கும் விக்ரம் லிமயே சம்பளம் ஆண்டுக்கு ரூ.8 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**விளையாட்டு**

1.இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் அணியின் புதிய கேப்டனாக ஜோ ரூட் நியமிக்கப்பட்டுள்ளார்.ஆல்ரவுண்டர் பென் ஸ்டோக்ஸ் துணை கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

2.ஹைதராபாதில் நடைபெற்ற இந்தியா-வங்கதேசம் இடையிலான ஒரேயொரு டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 208 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.இந்திய கேப்டன் விராட் கோலி ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

3.வங்கதேசம் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரின் வெற்றி பெற்றதன் மூலம் இந்திய அணியின் கேப்டன் விராட் கோலி 19 போட்டிகளில் தோல்விகளை சந்திக்காமல்,

கவாஸ்கரின் சாதனையை முறியடித்துள்ளார்.இதன்மூலம் அதிக போட்டிகளில் இந்திய அணி தோல்வியை சந்திக்காமல் வழிநடத்திய கேப்டன் என்ற பெருமையை விராட் கோலி பெற்றுள்ளார்.சர்வதேச அளவில் வெஸ்ட் இண்டீஸ் அணி 27 போட்டிகளில் (17 வெற்றி, 10 டிரா) தோல்விகளை சந்திக்காமல் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

**இன்றைய தினம்**

**1.இன்று உலக காதலர் தினம் (World Valentine's Day).**

ரோமாபுரியை ஆட்சிபுரிந்த இரண்டாம் கிளாடியஸ் என்ற மன்னன் தனது நாட்டில் வாழும் இளைஞர்கள் காதலிக்கக்கூடாது எனத் தடைவிதித்தான். வாலன்டைன் என்கிற கிறிஸ்துவ பாதிரியார் காதலை ஆதரித்து பலருக்கு காதல் திருமணம் செய்துவைத்தார். காதலர்களுக்கு ஆதரவாக இருந்த வாலண்டைனின் தலை கி.பி. 269ஆம் ஆண்டு பிப்ரவரி 14இல் வெட்டப்பட்டது. அவரின் இறந்த தினமே காதலர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

2.ஐபிஎம் நிறுவனம் அமைக்கப்பட்ட நாள் 14 பிப்ரவரி 1924.

3.சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது மாநாடு மொஸ்கோவில் ஆரம்பமான நாள் 14 பிப்ரவரி 1956.

**நடப்பு நிகழ்வுகள் – 15 பிப்ரவரி 2017**

**தமிழகம்**

1.அதிமுக தற்காலிக பொதுச் செயலர் சசிகலா,சுதாகரன், இளவரசி ஆகிய 3 பேருக்கும் சொத்துக் குவிப்பு வழக்கில் நீதிபதி குன்ஹா அளித்த 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை தீர்ப்பு செல்லும் என்று உச்ச நீதிமன்றம் நேற்று உறுதி செய்துள்ளது.மேலும் தலா ரூ.10 கோடி அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.பினாகி சந்திரகோஷ், அமிதவராய் ஆகிய இரு நீதிபதிகளும் ஒருமித்த தீர்ப்பை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**இந்தியா**

1.ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் முதலாவது ஏவுதளத்தில் இருந்து இன்று காலை 9.28 மணிக்கு இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவின் பிஎஸ்எல்வி சி-37 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.ஏழு நாடுகளைச் சேர்ந்த 104 செயற்கைக் கோள்களுடன் விண்ணில் செலுத்தப்பட்டது.இதன் மூலம் 2014 ம் ஆண்டு ரஷ்யா ஒரே நேரத்தில் 33 செயற்கைகோள்களை விண்ணிற்கு அனுப்பிய சாதனையை தற்போது இந்தியா முறியடித்து, புதிய உலக சாதனையை படைத்துள்ளது.

2.திரைப்படம், செய்திப்படம் அல்லது ஆவணப்படம் ஆகியவற்றில் தேசிய கீதம் இசைக்கும் போது பொதுமக்கள் எழுந்து நிற்கத் தேவையில்லை என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.ஷியாம் நாராயணன் என்பவர் தாக்கல் செய்திருந்த பொது நல வழக்கின் மீது உச்ச நீதிமன்றம் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளது.மேலும் இதுதொடர்பான அடுத்தகட்ட விசாரணை வரும் ஏப்ரல் 18-ஆம் தேதிக்கு உச்ச நீதிமன்றம்

ஒத்தி வைத்தது.

3.இதய நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்து குழாய் வடிவத்திலான “கரோனரி ஸ்டென்டு” பொருத்துவது வழக்கம். இதன் விலையை 85 சதவீத அளவுக்கு மத்திய அரசு நேற்று குறைத்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

4.இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சச்சின் தெண்டுல்கர் மராட்டிய மாநிலம் ஒஸ்மான்பாத் மாவட்டத்தில் உள்ள டோன்ஜா என்ற கிராமத்தை தத்தெடுத்து அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க ரூ.4 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளார்.முன்னதாக ஆந்திர மாநிலத்தில் உள்ள புட்டம்ராஜூ கான்ட்ரிகா என்ற கிராமத்தை தத்தெடுத்து தெண்டுல்கர் அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுத்தது நினைவிருக்கலாம்.மேலும் சச்சின் தெண்டுல்கர் டெல்லி மேல்-சபை எம்.பி.யாக இருப்பது குறிப்பிடத்தக்கது.அவரது எம்.பி.உள்ளூர் மேம்பாட்டு நிதியில் இருந்து நிதியை ஒதுக்கீடு செய்து வருகிறார்.

**<u>வர்த்தகம்</u>**

1.இந்தியா போஸ்ட் பேமென்ட் வங்கிக்கு (ஐ.பி.பி.பி.) வரும் 2017-18 நிதி ஆண்டுக்கு மத்திய அரசு ரூ.500 கோடியை ஒதுக்கியுள்ளது.

**<u>உலகம்</u>**

1.அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக்கேல் ஃபிளின் தனது பதவியை ராஜினாமா செய்வதாக கடந்த பிப்ரவரி 13-ஆம் தேதி அறிவித்துள்ளார்.

**<u>விளையாட்டு</u>**

1.சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐசிசி) மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள பேட்டிங் தரவரிசையில் இந்திய அணி கேப்டன் மிதாலி ராஜ் 2-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

**<u>இன்றைய தினம்</u>**

**<u>1.இன்று கலிலியோ கலிலி பிறந்த தினம் (Galileo Galilei Birth Anniversary Day).</u>**

கலிலியோ 1564ஆம் ஆண்டு பிப்ரவரி 15 அன்று இத்தாலி நாட்டில் பிறந்தார். இவரை நவீன வானவியல் ஆய்வுகளின் தந்தை, நவீன இயற்பியலின் தந்தை மற்றும் நவீன அறிவியலின் தந்தை எனவும் அழைக்கின்றனர். தொலைநோக்கி மூலம் வியாழன் கிரகத்திற்கு 4 நிலாக்கள், சனிக்கிரகத்திற்கு வளையம், சூரியனில் கரும்புள்ளிகள் இருப்பதையும் கண்டுபிடித்தார்.

2.யூடியூப் சேவை ஆரம்பிக்கப்பட்ட நாள் 15 பிப்ரவரி 2005.

3.புனித ரோம் பேரரசின் மன்னனாக மூன்றாம் பேர்டினண்ட் முடி சூடிய நாள் 15 பிப்ரவரி 1637.

4.யாழ்ப்பாணத்தில் முதற்தடவையாக அரிசி பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்ட நாள் 15 பிப்ரவரி 1920.

5.ENIAC என்ற முதல் தலைமுறைக் கணினி அறிமுகமான நாள் 15 பிப்ரவரி 1946.

**நடப்பு நிகழ்வுகள் – 16 பிப்ரவரி 2017**

**இந்தியா**

1.ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) தயாரித்துள்ள நேத்ரா கண்காணிப்பு விமானம் கடந்த பிப்ரவரி 14-ஆம் தேதி பெங்களூரில் தொடங்கிய இந்திய விமானத் தொழில் கண்காட்சியில் அதிகாரப்பூர்வமாக இந்திய விமானப் படையில் சேர்த்து கொள்ளப்பட்டது.விஞ்ஞானி ராஜலட்சுமி தலைமையிலான குழுவினர் இதை வடிவமைத்தனர்.

2.பெங்களூரில் எலகங்கா விமானப்படை தளத்தில் 11-வது சர்வதேச விமான தொழில் கண்காட்சியை ராணுவ மந்திரி மனோகர் பாரிக்கர் கடந்த பிப்ரவரி 14-ஆம் தேதி தொடங்கி வைத்தார்.

3.பிரதமரின் வீட்டு வசதித் திட்ட இணையதளப் பக்கத்தில் இருந்து பிரதமர் மோடி, மத்திய அமைச்சர் வெங்கய்ய நாயுடு ஆகியோரின் படங்களை நீக்குமாறு மத்திய அரசுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.உத்தரப் பிரதேசத்தில் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறுவதையொட்டி தேர்தல் ஆணையம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

**உலகம்**

1.ஐ.நா. பொதுச் செயலர் ஆன்டோனியோ குட்டரெஸ், ஐ.நா. அமைதிப் படையின் புதிய தலைவராக, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜீன்-பியர் லாக்ரோயிக்ஸை (56) நியமித்துள்ளார்.தற்போது பதவி வகித்து வரும் ஹெர்வ் லாட்சூஸ், வரும் மார்ச் மாதத்துடன் ஓய்வு பெறுவதையொட்டி ஜீன்-பியர் லாக்ரோயிக்ஸை நியமித்துள்ளார்.

2.மூத்த பத்திரிகையாளர் டி.வி. பரசுராம் (93), கடந்த 14-ஆம் தேதி அமெரிக்காவில் காலமானார்.

**விளையாட்டு**

1.2017-ஆம் ஆண்டுக்கான லாரஸ் விருது வழங்கும் விழா ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான மொனாக்கோவில் கடந்த பிப்ரவரி 14-ஆம் தேதி நடைபெற்றது.இதில் சிறந்த விளையாட்டு வீரர் விருது தடகள வீரர் உசேன் போல்ட்க்கும்,சிறந்த விளையாட்டு வீராங்கனை விருது ரியோ ஒலிம்பிக் போட்டியில் ஜிம்னாஸ்டிக்ஸ் பிரிவில் தங்கம் வென்ற அமெரிக்க வீராங்கனை சைமன் பில்ஸ்ம் வென்றுள்ளனர்.

**இன்றைய தினம்**

1.வொலஸ் கரோத்தேர்ஸ் நைலோனுக்கான காப்புரிமம் பெற்ற நாள் 16 பிப்ரவரி 1937.

2.80 ஆண்டுகளாக பிரித்தானியர்களாக இருந்த கனேடியர்கள் முதற்தடவையாக கனேடிய குடியுரிமையைப் பெற்றனர். பிரதமர் வில்லியம் லியோன் மக்கென்சி முதலாவது குடியுரிமையைப் பெற்ற நாள் 16 பிப்ரவரி 1947.

3.எக்ஸ்புளோரர் 9 (S-56a) விண்ணுக்கு ஏவப்பட்ட நாள் 16 பிப்ரவரி 1961.

4.ஹெஸ்புல்லா தீவிரவாத இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட நாள் 16 பிப்ரவரி 1985.

5.2000 ஆம் ஆண்டில் தர்மபுரி பேருந்து தீவைப்பு நிகழ்வில் மூன்று மாணவிகளை

| |
|---|
| உயிருடன் எரித்துக் கொலை செய்த அ.தி.மு.க.வினர் மூவருக்கு தூக்குத்தண்டனயும் மேலும் 25 பேருக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்ட நாள் 16 பிப்ரவரி 2007. |
| **நடப்பு நிகழ்வுகள் – 17 பிப்ரவரி 2017**<br>**<u>தமிழகம்</u>**<br>1.தமிழகத்தின் 13-வது முதலமைச்சராக எடப்பாடி பழனிச்சாமி நேற்று பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் வித்யாசாகர் ராவ் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். அமைச்சர்களும் அவருடன் பதவியேற்றுக்கொண்டனர்.மேலும், 15 நாட்களில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்றும் ஆளுநர் முதலமைச்சருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.<br>**<u>இந்தியா</u>**<br>1.சபரிமலை அருகே கேரள அரசுக்கு சொந்தமான சிறு வெள்ளி எஸ்டேட் பகுதியில் விமான நிலையம் அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளதாக கேரள முதல்-மந்திரி பினராய் விஜயன் தெரிவித்துள்ளார்.<br>2.பாரத ஸ்டேட் வங்கியுடன் அதன் துணை வங்கிகளான ஸ்டேட் பாங்க் ஆப் பிகானீர் அண்ட் ஜெய்ப்பூர், ஸ்டேட் பாங்க் ஆப் திருவாங்கூர், ஸ்டேட் பாங்க் ஆப் பாடியாலா, ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர் மற்றும் ஸ்டேட் பாங்க் ஆப் ஹைதராபாத் ஆகிய வங்கிகளை இணைக்க மத்திய மந்திரி சபை ஒப்புதல் வழங்கியுள்ளது.<br>3.உச்சநீதி மன்றத்துக்கு ராஜஸ்தான் ஐகோர்ட் தலைமை நீதிபதி நவீன் சின்ஹா, கேரள மாநில ஐகோர்ட் தலைமை நீதிபதி மோகன் ஷாந்தனா கவுடர், சத்தீஸ்கர் மாநில தலைமை நீதிபதி திபக் குப்தா, கர்நாடக மாநில ஐகோர்ட் நீதிபதி அப்துல் நசீர் ஆகிய 5  நீதிபதிகள் நியமனத்துக்கு ஜனாதிபதி நேற்று ஒப்புதல் வழங்கினார்.இதையடுத்து, உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கை 28 ஆக உயர்ந்துள்ளது.<br>**<u>வர்த்தகம்</u>**<br>1.ஏர்-இந்தியா விமான சேவையில் முதன்முதலாக “ஏர்பஸ் 320 நியோ” ரக விமானம் நேற்று இணைந்துள்ளது.இண்டிகோ மற்றும் கோ-ஏர் நிறுவனங்களை அடுத்து ஏ320 நியோ ரக விமானங்களை சேவையில் பயன்படுத்தும் மூன்றாவது நிறுவனம் ஏர்-இந்தியா ஆகும்.<br>**<u>உலகம்</u>**<br>1.அமெரிக்காவுக்கான புதிய பாகிஸ்தான் தூதராக வெளியுறவுத் துறை செயலாளராக இருந்து வரும் அய்ஜாஸ் அகமது சவுத்ரி(58), நியமிக்கப்பட்டுள்ளார்.<br>2.மத்திய வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளராக உள்ள விகாஸ் ஸ்வரூப் கனடா நாட்டிற்கான புதிய இந்திய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.<br>**<u>இன்றைய தினம்</u>**<br>1.நியூஸ்வீக் முதலாவது இதழ் வெளிவந்த நாள் 17 பிப்ரவரி 1933.<br>2.விண்டோஸ் 2000 வெளியிடப்பட்ட நாள் 17 பிப்ரவரி 2000. |

**நடப்பு நிகழ்வுகள் – 18 பிப்ரவரி 2017**

**<u>இந்தியா</u>**

**1.**இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ கிரையோஜெனிக் என்ஜினினை வெற்றிகரமாக நேற்று பரிசோதனை செய்தது.மகேந்திரகிரியில் நடைபெற்ற இந்த சோதனை சுமார் 640 விநாடிகள் நடைபெற்றது.

**2.**உச்சநீதி மன்றத்துக்கு புதிய நீதிபதிகளாக சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.கே.கவுல், ராஜஸ்தான் ஐகோர்ட் தலைமை நீதிபதி நவீன் சின்ஹா, கேரள மாநில ஐகோர்ட் தலைமை நீதிபதி மோகன் ஷாந்தனா கவுடர், சத்தீஸ்கர் மாநில தலைமை நீதிபதி திபக் குப்தா, கர்நாடக மாநில ஐகோர்ட் நீதிபதி அப்துல் நசீர் ஆகிய 5 நீதிபதிகளும் நேற்று பதவியேற்றுக்கொண்டனர்.தலைமை நீதிபதி ஜே.எஸ்.கேஹர் இவர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

**3.**கேரள சமூக நலத்துறையின் சார்பில் “புன்னகை” என்ற திட்டத்தின் மூலம் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு இலவச பல் செட் வழங்க இந்த ஆண்டு திட்டமிடப்பட்டுள்ளது.

**4.**சம்பளத்தை வங்கிக்கணக்கில் செலுத்த வழி வகை செய்யும் ஊதிய திருத்த சட்டத்துக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஒப்புதல் அளித்துள்ளார்.

**5.**அதிமுக தற்காலிக பொதுச் செயலர் சசிகலா,சுதாகரன், இளவரசி ஆகிய 3 பேருக்கும் சொத்துக் குவிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றம் சமீபத்தில் தண்டனை வழங்கியது.கர்நாடகத்தில் 12 ஆண்டுகளாக இந்த சொத்துக் குவிப்பு வழக்கு நடைபெற்று வந்தது.இதற்காக கர்நாடக அரசு ரூ.12.04 கோடியை செலவு செய்துள்ளது.எனவே இந்த தொகையை திரும்ப வழங்கக் கோரி தமிழக அரசுக்கு கர்நாடக அரசு கடிதம் அனுப்பியுள்ளது.

**6.**உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக தற்போது 28 பேர் உள்ளனர்.அதில் பெண் நீதிபதியாக ஆர்.பானுமதி ஒருவர் மட்டுமே உள்ளது குறிப்பிடத்தக்கது.

**<u>வர்த்தகம்</u>**

**1.**இந்திய பங்குச் சந்தை ஒழுங்காற்று ஆணையத்தின் (SEBI) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அஜய் தியாகியின் பதவிக் காலத்தை மத்திய அரசு குறைத்துள்ளது.முன்பு அஜய் தியாகியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள் என அறிவித்த மத்திய அரசு தற்போது மூன்று ஆண்டுகளாக குறைத்துள்ளது.

**<u>இன்றைய தினம்</u>**

**1.**முதலாவது அதிகாரபூர்வமான விமான அஞ்சல் சேவை இந்தியாவில் அலகாபாத்தில் ஆரம்பமான நாள் 18 பிப்ரவரி 1911.

**2.**முதற்தடவையாக ஆஸ்கார் விருது அறிவிக்கப்பட்ட நாள் 18 பிப்ரவரி 1929.

**3.**நேபாளத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட நாள் 18 பிப்ரவரி 1959.

**நடப்பு நிகழ்வுகள் – 19 பிப்ரவரி 2017**

**தமிழகம்**

1.தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியை மெஜாரிட்டியை நிரூபிக்கும்படி ஆளுநர் சில தினங்களுக்கு முன்பு உத்தரவிட்டார். இதையொட்டி நேற்று சட்டசபை சிறப்பு கூட்டம் நடைபெற்றது.அவை தொடங்கியதும் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நம்பிக்கை தீர்மானத்தை முன்மொழிந்து வாக்கெடுப்பு நடத்தும்படி கேட்டுக்கொண்டார்.வாக்கெடுப்பில் 122 உறுப்பினர்கள் எடப்பாடி பழனிச்சாமிக்கு ஆதரவாக வாக்களித்தனர். 11 பேர் எதிர்த்து வாக்களித்தனர்.முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி பெரும்பான்மையை நிரூபித்ததால் நம்பிக்கை வாக்கெடுப்பில் எடப்பாடி பழனிச்சாமி தலையிலான அரசு வெற்றி பெற்றதாக சபாநாயகர் அறிவித்தார்.

**இந்தியா**

1.சமூக சேவகி இரோம் சர்மிளாவின் மக்கள் எழுச்சி நீதிக் கூட்டணி கட்சிக்கு தில்லி முதல்வர் அரவிந்த் கேஜரிவால் ரூ.50,000 நன்கொடை வழங்கியுள்ளார்.மணிப்பூர் சட்டப்பேரவைக்கு வரும் மார்ச் 4 மற்றும் 8-ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாகத் தேர்தல் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

**வர்த்தகம்**

1.மஹிந்திரா & மஹிந்திரா நிறுவனத்தின் நவீன தொழில்நுட்பத்திலான புதிய மின்சார கார் சென்னையில் கடந்த பிப்ரவரி 17-ஆம் தேதி அறிமுகம் செய்யப்பட்டது.இந்த கார்க்கு "ஈ2ஓப்ளஸ்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

**உலகம்**

1.பாகிஸ்தானில் சிறுபான்மையினராக உள்ள ஹிந்துக்கள் திருமணம் தொடர்பான மசோதா அந்த நாட்டு நாடாளுமன்றத்தின் மேலவையில் கடந்த பிப்ரவரி 17-ஆம் தேதி ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**விளையாட்டு**

1.இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (பிசிசிஐ) பொது மேலாளர் (வணிகம்) ஆர்.பி.ஷா தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

**இன்றைய தினம்**

1.**இன்று கோப்பர்நிக்கஸ் பிறந்த தினம் (Copernicus Birth Anniversary Day).**

கோப்பர்நிக்கஸ் 1473ஆம் ஆண்டு பிப்ரவரி 19 அன்று போலந்து நாட்டில் பிறந்தார். பூமியை மையமாகக் கொண்டே பிற கோள்கள் இயங்குகின்றன என்ற பூமி மையக்கோட்பாட்டை மாற்றி சூரிய மையக்கோட்பாட்டை அறிவித்தார். பூமி உள்பட அனைத்துக் கோள்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன என்ற புரட்சிகரமான கொள்கையை வகுத்து, வானியலில் புதிய வளர்ச்சிக்கு வித்திட்டார்.

2.கிராமபோனின் காப்புரிமத்தை தாமஸ் ஆல்வா எடிசன் பெற்ற நாள் 19 பிப்ரவரி 1878.

| |
|---|
| 3.சோவியத் ஒன்றியம் மீர் விண்வெளி நிலையத்தை விண்ணுக்கு ஏவிய நாள் 19 பிப்ரவரி 1986.<br>4.இன்று ‘தமிழ் தாத்தா’ உ.வே.சாமிநாத ஐயர் பிறந்த தினம்.இவர் பிறந்த தேதி 19 பிப்ரவரி 1855. |
| **நடப்பு நிகழ்வுகள் – 20 பிப்ரவரி 2017**<br>**<u>தமிழகம்</u>**<br>1.கடந்த பிப்ரவரி 18-ஆம் தேதி தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபித்தார்.இந்த நிகழ்வு கடந்த 1988-ம் ஆண்டு அதிமுக 2 அணிகளாகப் பிளவுபட்டபோது தமிழ்நாடு சட்டப்பேரவையில் நடைபெற்ற பலப்பரீட்சைக்கு பிறகு அதாவது 29 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் நடைபெற்றது.<br>**<u>இந்தியா</u>**<br>1.சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வுபெற்ற அல்டமாஸ் கபிர் (68), கொல்கத்தாவில் நேற்று காலமானார்.இவர் மேற்கு வங்காள மாநில தலைநகரான கொல்கத்தாவில் 19-7-1948 அன்று பிறந்தார்.<br>2.பள்ளி மாணவர்கள் கல்வி உதவித் தொகை பெற ஆதார் எண் கட்டாயம் என்று மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.இந்த திட்டத்தின் மூலம் உதவித் தொகையை பெற விரும்பும் மாணவர்கள் வரும் ஜூன் 30-ம் தேதிக்குள் தங்களின் ஆதார் எண்ணைப் பதிவு செய்ய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.<br>3.கல்விக்கடன் கோரி விண்ணப்பிக்கும் மாணவர்களின் வசதிக்காக மத்திய அரசு வித்யா லட்சுமி போர்ட்டல் எனப்படும் இணையதளத்தை ஏற்படுத்தி உள்ளதாக மத்திய நிதித்துறை இணை அமைச்சர் அர்ஜூன் ராம் மேக்வால் தெரிவித்துள்ளார்.<br>4.உத்திர பிரதேச சட்டப் பேரவைத் தேர்தலுக்கான மூன்றாம் கட்டமாக 69 தொகுதிகளில் நேற்று தேர்தல் நடைபெற்றது.இதில் 61.16 சதவீத வாக்குகள் பதிவாயின.<br>**<u>வர்த்தகம்</u>**<br>1.இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் புதிய தலைவராக டிசிஏ ரங்கநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.<br>**<u>உலகம்</u>**<br>1.அமெரிக்கா, ரஷியா, ஜப்பான், உள்ளிட்ட 13 நாடுகள் இணைந்து விண்வெளியில் ஆய்வகம் கட்டி வருகின்றன.அங்கு 4 மாதங்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் 3 வீரர்கள் சென்று தங்கி பணிபுரிகின்றனர்.அங்கு தங்கி பணிபுரியும் வீரர்களின் உணவுக்காக சில காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளன. அவ்வகையில் கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு அமெரிக்க விண்வெளி வீரர் பெக்கி விட்சன் என்பவர் தொக்யோ பெகானா என அழைக்கப்படும் சீன முட்டை கோசை பயிரிட்டிருந்தார்.இந்த முட்டைகோஸ் சமீபத்தில் அறுவடை செய்யப்பட்டது.இதன் மூலம் சீன முட்டை கோஸ் விண்வெளியில் பயிரிடப்பட்டுள்ள 5-வது பயிர் என்ற பெருமையை பெற்றுள்ளது.இந்த தகவலை நாசா |

விண்வெளி மையம் வெளியிட்டுள்ளது.

**விளையாட்டு**

1.ஐ.பி.எல் தொடரில் புனே அணியின் கேப்டன் பொறுப்பில் இருந்து மகேந்திர சிங் தோனி நீக்கப்பட்டுள்ளார்.இவருக்கு பதிலாக புதிய கேப்டனாக ஆஸ்திரேலிய அணியின் ஸ்டீவ் ஸ்மித் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**இன்றைய தினம்**

**1.இன்று உலக சமூக நீதி தினம் (World Day of Social Justice).**

உலகம் முழுவதும் ஏழை மற்றும் பணக்காரர்களுக்கு இடையே மிகப்பெரிய இடைவெளி அதிகமாகிக்கொண்டே வருகிறது. வளர்ந்து வரும் நாடுகளில் கண்ணியமான வேலைகளை அனைவருக்கும் வழங்கி மனித வளத்தை மேம்படுத்த வேண்டும். ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் நியாயங்களை கேட்டு அவர்களுக்கு சமூக நீதி கிடைத்திட வேண்டும் என்கிற நோக்கில் இத்தினம் 2007ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.

2.ஆறாம் எட்வேர்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடிய நாள் 20 பிப்ரவரி 1547.

3.அருணாசலப் பிரதேசம் அசாமில் இருந்து பிரிந்து தனி மாநிலமாகிய நாள் 20 பிப்ரவரி 1987.

**நடப்பு நிகழ்வுகள் – 21 பிப்ரவரி 2017**

**தமிழகம்**

1.தமிழக முதல்வராக எடப்பாடி பழனிசாமி முறைப்படி நேற்று பகல் 12.30 மணியளவில் பொறுப்பேற்றுக் கொண்டார். முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்ட அவர் 500 டாஸ்மாக் கடைகள் மூடல், அம்மா இரு சக்கர வாகனம் திட்டம், மகப்பேறு நிதியுதவி உயர்வு, மீனவர்களுக்கு வீட்டு வசதி திட்டம், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான ஊக்கத்தொகை அதிகரிப்பு ஆகிய 5 அறிவிப்புகள் கொண்ட கோப்புகளில் கையெழுத்திட்டார்.

**இந்தியா**

1.கர்நாடக மாநிலத்தில் வருகிற 22-ந் தேதி முதல் சாலைப் போக்குவரத்து கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.இரண்டு நாள் இந்த கணக்கெடுப்பு நடைபெற உள்ளது.வாகனப் போக்குவரத்தின் அளவை மதிப்பிடுவதுதான் இந்த கணக்கெடுப்பின் நோக்கமாகும்.

2.திருமலை-திருப்பதி தேவஸ்தானத்தின் அறங்காவலர் குழு உறுப்பினராக சமூக சேவகியான சுதா நாராயணமூர்த்தி கடந்த பிப்ரவரி 19-ஆம் தேதி ஏழுமலையான் கோவிலில் உள்ள தங்க வாசலில் பதவியேற்றுக் கொண்டார்.

3.ரூ.2 லட்சத்துக்கு மேல் ரொக்கப்பணம் கொடுத்து நகை வாங்கினால், இனி 1 சதவீதம் வரி செலுத்த வேண்டும் என மத்திய அரசு அதிகாரி தெரிவித்துள்ளார்.வரும் ஏப்ரல் 1-ந் தேதி முதல் இது அமலுக்கு வருகிறது.

4.திருமலை-திருப்பதி ஏழுமலையானுக்கு ஆந்திரா மாநிலம், கடப்பா மாவட்டம், புலிவேந்தலா பகுதியை சேர்ந்த ஸ்ரீராமாஞ்சுல ரெட்டி, இவரது மனைவி வெங்கட சுஜாதா

ஆகியோர் ரூ.16 லட்சத்தில் தங்கம், வெள்ளி இழைகளால் செய்யப்பட்ட தர்மாவரம் பட்டு வேஷ்டி மற்றும் அங்க வஸ்திரத்தை தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் சதலவாடா கிருஷ்ண மூர்த்தியிடம் கடந்த பிப்ரவரி 19-ஆம் தேதி வழங்கினர்.இது தற்போது உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.60 ஆயிரம் பேர் தறி நெய்ததால் இவை இண்டர்நேஷனல் ஒண்டர் புக் ஆ ஃப் ரெகார்ட்ஸில் இடம் பிடித்துள்ளது.

**<u>உலகம்</u>**

1.இங்கிலாந்து தலைநகர் லண்டனை சேர்ந்தவர் ரேவுட் ஹால் (54),சில தினங்களுக்கு முன்பு மாரடைப்பு ஏற்பட்டதை தொடர்ந்து அவரை மருத்துவமனையில் அனுமதித்தனர்.ஆனால் அவருக்கு மாரடைப்பு தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டே இருந்தது.அதாவது 24 மணி நேரத்தில் 27 தடவை மாரடைப்பு அவரை தாக்கியது.இருந்தும் அதிர்ஷ்டவசமாக அவர் உயிர் பிழைத்தார்.

2.ஜெர்மனி நாஜி சர்வாதிகாரி அடால் ஃப் ஹிட்லர் இரண்டாம் உலகப்போர் காலக்கட்டங்களில் பயன்படுத்திய டெலிபோன் 2,43,000 டாலர்களுக்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஏலம் அமெரிக்காவில் நடத்தப்பட்டது.இந்த தொலைபேசியை ஏலம் எடுத்தவரின் பெயர் சில காரணங்களினால் வெளியிடப்படவில்லை.

**<u>விளையாட்டு</u>**

1.சர்வதேச விளையாட்டு நிறுவனமான “பூமா” விராட் கோலியை 8 ஆண்டுக்கு ரூ.110 கோடிக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.இதன் மூலம் இந்திய வீரர்களில் ஒருவர் ஒரே விளம்பரத்தில் அதிக தொகைக்கு ஒப்பந்தம் ஆனவர் என்ற பெருமையை விராட் கோலி படைத்திருக்கிறார்.

**<u>இன்றைய தினம்</u>**

**<u>1.இன்று சர்வதேச தாய்மொழி தினம் (International Mother Language Day).</u>**

உலகில் சுமார் 6000 மொழிகள் உள்ளன. ஏற்கனவே பல மொழிகள் அழிந்து விட்டன. தற்போது 3000 மொழிகள் அழியும் தருவாயில் இருக்கின்றன. அழிந்துவரும் மொழிகளைப் பாதுகாக்கவும், அவற்றின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் யுனெஸ்கோ அமைப்பு உலகம் முழுவதும் சர்வதேச தாய்மொழி தினத்தை 1999ஆம் ஆண்டு முதல் பிப்ரவரி 21 அன்று கொண்டாடுகிறது.

2.நீராவியால் இயங்கிய முதல் தொடருந்து இயந்திரம் வேல்சில் இயக்கி சோதித்துப் பார்க்கப்பட்ட நாள் 21 பிப்ரவரி 1804.

3.கடைசி கரலீனா பரக்கீட் என்ற பறவை சின்சினாட்டியில் இறந்த நாள் 21 பிப்ரவரி 1918.

4.முதலாவது பறக்கும் தானுந்து வெற்றிகரமாகப் பறக்க விடப்பட்ட நாள் 21 பிப்ரவரி 1937.

5.சோவியத்தின் லூனா 20 சந்திரனில் இறங்கிய நாள் 21 பிப்ரவரி 1972.

**நடப்பு நிகழ்வுகள் – 22 பிப்ரவரி 2017**

**<u>இந்தியா</u>**

1.தபால் நிலையங்களில் கடவுச்சீட்டுக்கு (பாஸ்போர்ட்) விண்ணப்பிக்கும் புதிய முறையை வெளியுறவு அமைச்சகம் அடுத்த மாதம் முதல் அமல்படுத்தப்படவுள்ளது.

**வர்த்தகம்**

1.டாடா சன்ஸ் குழுமத்தின் புதிய தலைவராக என்.சந்திரசேகரன் நேற்று பதவியேற்றார்.

**உலகம்**

1.இலங்கையில் நடைபெறவுள்ள "புத்த பூர்ணிமா" விழாவில் கலந்துகொள்வதற்காக, பிரதமர் நரேந்திர மோடி, வரும் மே மாதம் அந்த நாட்டுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

2.வெளிநாடுகளிலிருந்து முஸ்லிம்கள் அமெரிக்காவில் குடியேறுவதைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகப் புதிய சட்டம் விரைவில் இயற்றப்படும் என்று அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

3.ஐக்கிய நாடுகள் சபைக்கான ரஷ்யா தூதர் விடாலி சர்கின் கடந்த பிப்ரவரி 20-ஆம் தேதி காலமானார்.

4.அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக முன்னாள் ராணுவ துணை தளபதி ஹெர்பர்ட் ரேமண்ட் மெக்மாஸ்டர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**விளையாட்டு**

1.பாகிஸ்தான் ஆல் ரவுண்டரான சாகித் அப்ரிடி(36) சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

2.பெண்கள் உலகக் கோப்பைக்கான தகுதிச் சுற்று தொடர் இலங்கையில் நடைபெற்றது. இதில் இறுதிபோட்டியில் தென்ஆப்பிரிக்காவை வீழ்த்தி இந்தியா மகளிர் அணி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.இந்தியா மகளிர் அணி வீராங்கனை தீப்தி ஷர்மா ஆட்ட நாயகி விருது பெற்றார்.

**இன்றைய தினம்**

1.இன்று மகாத்மா காந்தி மனைவி கஸ்தூரிபாய் இறந்த தினம்.இவர் இறந்த தேதி 22 பிப்ரவரி 1944.

2.இன்று அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி வாஷிங்டன் பிறந்த தினம்.இவர் பிறந்த தேதி 22 பிப்ரவரி 1732.

3.ஸ்பெயின் புளோரிடாவை ஐக்கிய அமெரிக்காவுக்கு ஐந்து மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு விற்ற நாள் 22 பிப்ரவரி 1819.

4.வாஷிங்டன் பல்கலைக்கழகம் எலியட் செமினறி என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட நாள் 22 பிப்ரவரி 1853.

5.ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் ஒரு பிரிவான நாள் 22 பிப்ரவரி 1900.

**நடப்பு நிகழ்வுகள் – 23 பிப்ரவரி 2017**

**தமிழகம்**

1.பழம் பெரும் திரைப்பட இயக்குநர் மித்ரதாஸ் (103) சென்னையில் கடந்த பிப்ரவரி 20-ஆம்

தேதி காலமானார்.

2.சென்னை பெரம்பூர் கலிகி அரங்கநாதன் மான்ட்போர்டு குழும பள்ளிகளைச் சேர்ந்த 235 பேர் ஒரே நேரத்தில் ரூபிக்ஸ் கனசதுரத்தை 2 நிமிடத்துக்குள் மிகச்சரியாக நிறவரிசைப்படி பொருத்தி சாதனை புரிந்துள்ளனர்.இதில் பங்குகொண்ட மாணவர்கள் 1 நிமிடம் 58 விநாடிகளில் ரூபிக்ஸ் கனசதுரத்தை சரியாகப் பொருத்தினர்.மேலும் கேஆர்எம் பப்ளிக் பள்ளியைச் சேர்ந்த 8 வயது மாணவன் சி.எஸ்.ஆஷிக் மாதவ், ரூபிக்ஸ் கனசதுரத்தை 60 நிமிடத்தில் 65 முறை சரியான நிறவரிசைப்படி பொருத்தி மற்றொரு சாதனை படைத்தார்.இந்தியா புக் ஆ்ஃப் ரெக்கார்ட்ஸ், ஆசியா புக் ஆ்ஃப் ரெக்கார்ட்ஸ் அதிகாரி கோமல் சிங் முன்னிலையில் இந்த சாதனை நிகழ்வு நடைபெற்றது.

**<u>இந்தியா</u>**

1.நாகாலாந்தில் புதிய முதலமைச்சராக தேர்வு செய்யப்பட்ட ஷுரோஷெலி லெய்சீட்சு நேற்று பதவியேற்றுக்கொண்டார்.ஆளுநர் பி.பி.ஆச்சார்யா இவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.முன்னதாக முதல்வர் ஜெலியாங் ராஜினாமா செய்ததையடுத்து புதிய முதல்வராக ஷுரோஷெலி லெய்சீட்சு பதவியேற்றுக்கொண்டார்.

2.காவிரி நதி நீர் பங்கீட்டு தீர்ப்பாய தலைவராக நீதிபதி அபய் மனோகர் சப்ரேவை கடந்த பிப்ரவரி 20-ம் தேதி மத்திய அரசு நியமித்துள்ளது.

3.நாடு முழுவதும் கூடுதலாக 50 சோலார் பூங்காக்கள் அமைக்க மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை கூட்டத்தில் இந்த அனுமதி வழங்கப்பட்டது.

**<u>உலகம்</u>**

1.ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சர்வதேச அளவில் கடந்த 5 ஆண்டுகளில் ஆயுத இறக்குமதியில் இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் இருப்பதாக தெரிவித்துள்ளது.

**<u>விளையாட்டு</u>**

1.2019-ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியை இந்தியாவில் நடத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.இந்தப் போட்டியில் வெற்றி பெறுபவர்கள், 2020-ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறுவார்கள்.

**<u>இன்றைய தினம்</u>**

1.ருடொல்்ஃப் டீசல் இயந்திரத்துக்கான காப்புரிமம் பெற்ற நாள் 23 பிப்ரவரி 1893.

2.10 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு ஐக்கிய அமெரிக்கா பனாமா கால்வாயின் உரிமையைப் பெற்றுக் கொண்ட நாள் 23 பிப்ரவரி 1904.

3.ரோட்டரி அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட நாள் 23 பிப்ரவரி 1905.

4.புளூட்டோனியம் முதற்தடவையாக உருவாக்கப்பட்ட நாள் 23 பிப்ரவரி 1941.

5.அனைத்துலக தரநிர்ணய தாபனம் (ISO)ஆரம்பிக்கப்பட்ட நாள் 23 பிப்ரவரி 1947.
6.இன்று கயானா நாட்டில் குடியரசு தினம் கொண்டாடப்படுகிறது.

**நடப்பு நிகழ்வுகள் – 24 பிப்ரவரி 2017**

**தமிழகம்**

1.அதிமுகவின் துணைப் பொதுச்செயலாளராக டி.டி.வி. தினகரன் நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

**உலகம்**

1.வங்கதேசத்துக்கு இரண்டு நாள் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் எஸ்.ஜெய்சங்கர்,வங்கதேசப் பிரதமர் ஷேக் ஹசீனாவை நேற்று சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார்.

2.நோபல் பரிசு பெற்ற அமெரிக்க பொருளாதார மேதை கென்னத் ஜே (95), ஆரோ அமெரிக்கா நாட்டில் சான் பிரான்சிஸ்கோ மாகாணத்தில் உள்ள பாலோ நகரில் காலமானார்.

3.அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான “நாசா”வின் விஞ்ஞானிகள் பூமியைப் போன்று 7 கிரகங்கள் இருப்பதை கண்டுபிடித்துள்ளனர்.நமது பூமியில் இருந்து சுமார் 39 ஒளி ஆண்டுகள் தொலைவில் இந்த கிரகங்கள் உள்ளன.இந்த 7 கிரகங்களும் ஒரு நட்சத்திரத்தைச் சுற்றி அமைந்துள்ளன. இதற்கு “டிராபிஸ்ட்-1″ எனப் பெயரிட்டுள்ளனர்.

**விளையாட்டு**

1.சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் (எ.ஃப்.ஐ.எச்.) சார்பில் வழங்கப்படும் ஆண்டின் சிறந்த வீரர், வீராங்கனைக்கான விருதுக்கு பெல்ஜியம் கேப்டன் ஜான் டோமென், நெதர்லாந்து வீராங்கனை நவோமி வான் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**இன்றைய தினம்**

1.இன்று அதிமுக முன்னாள் பொதுச்செயலாளர்,முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பிறந்த தினம்.இவர் பிறந்த தேதி 24 பிப்ரவரி 1948.

2.இன்று தட்டச்சுப் பொறியின் தந்தை ஆர்.முத்தையா பிறந்த தினம்.இவர் பிறந்த தேதி 24 பிப்ரவரி 1886.

3.நாசிக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட நாள் 24 பிப்ரவரி 1920.

4.வாட்ஸ் ஏப் நிறுவனம் ஜான் கௌமால் கலிபோர்னியாவில் தொடங்கப்பட்ட நாள் 24 பிப்ரவரி 2009.

**நடப்பு நிகழ்வுகள் – 25 பிப்ரவரி 2017**

**தமிழகம்**

1.கோவை ஈஷா யோக மையத்தில் 112 அடி உயர ஆதியோகி – சிவன் திருமுகத்தை பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்து வைத்தார்.

**இந்தியா**

1.நாட்டிலேயே முதன் முறையாக பாலியல் குற்றவாளிகள் அடங்கிய பதிவேட்டை அறிமுகம் செய்யப் போவதாக கேரள அரசு தெரிவித்துள்ளது.கேரள சட்டப்பேரவை கூட்டத் தொடரின் முதல் நாளில் ஆளுநர் பி.சதாசிவம் இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

2.உத்தரப் பிரதேச சட்டப்பேரவைக்கு 4-ம் கட்டமாக 53 தொகுதிகளில் கடந்த பிப்ரவரி 23-ஆம் தேதி தேர்தல் நடைபெற்றது.இதில் 61 சதவீத வாக்குகள் பதிவானதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

3.மத்திய பள்ளிக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) பள்ளி வாகனங்களில் கண்காணிப்பு கேமரா, ஜிபிஎஸ் கருவி மற்றும் வேகக் கட்டுப்பாட்டு சாதனங்கள் ஆகியவற்றை கட்டாயம் பொருத்தியிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

**வர்த்தகம்**

1.நாட்டின் மிகப்பெரிய டெலிகாம் நிறுவனமான ஏர்டெல், டெலிநார் இந்தியா நிறுவனத்தை வாங்குவதாக அறிவித்துள்ளது.

**விளையாட்டு**

1.புனேவில் இந்தியா – ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கடந்த பிப்ரவரி 24-ம் தேதி தொடங்கியது.

2.இந்தியா – ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அஸ்வின் புதிய சாதனை படைத்துள்ளார்.ஒரு ஹோம் சீசனில் அதிக விக்கெட்டுகள் எடுத்த இந்தியர் என்ற சாதனையை அஸ்வின்  படைத்துள்ளார்.1979-80 காலகட்டத்தில் கபில் தேவ் 13 டெஸ்டுகளில் 63 விக்கெட்டுகள் எடுத்ததே சாதனையாக இருந்தது.இந்த சாதனையை அஸ்வின் 10-வது டெஸ்டில் முறியடித்துள்ளார்.

**இன்றைய தினம்**

1.முதன்முதலாக பிரிதிவி ஏவுகணை ஏவப்பட்ட நாள் 25 பிப்ரவரி 1988.

2.சாமுவேல் கோல்ட் சுழல் துப்பாக்கிக்கான அமெரிக்கக் காப்புரிமத்தைப் பெற்ற நாள் 25 பிப்ரவரி 1836.

3.தாமஸ் டெவன்போர்ட் மின்சாரத்தில் இயங்கும் மோட்டாருக்கான அமெரிக்கக் காப்புரிமத்தைப் பெற்ற நாள் 25 பிப்ரவரி 1837.

4.சோவியத் ஒன்றியத்திற்கும் ஜப்பானுக்கும் இடையில் தூதரக உறவு ஆரம்பிக்கப்பட்ட நாள் 25 பிப்ரவரி 1925.

5.அடொல்ஃப் ஹிட்லர் ஜெர்மனியின் குடியுரிமையைப் பெற்ற நாள் 25 பிப்ரவரி 1932.

**நடப்பு நிகழ்வுகள் – 26 பிப்ரவரி 2017**

**இந்தியா**

1.சர்வதேச அளவில் தற்கொலையில் இந்தியா முதலிடம் வகிப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

2.திருமலை-திருப்பதி தேவஸ்தானம் 3,681 கிலோ தங்கத்தை வங்கிகளில் முதலீடு

செய்துள்ளது.இதில் உண்டியலில் காணிக்கையாகக் கிடைத்த 1,400 கிலோ தங்கத்தை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் 1.25 சதவீதம் வட்டிக்கும்,பஞ்சாப் நேஷனல் வங்கியில் 1,311 கிலோ தங்கத்தை 1.75 சதவீத வட்டிக்கும்,970 கிலோ தங்கத்தை, மத்திய அரசின் தங்க முதலீட்டுத் திட்டத்தின் கீழ் ஓராண்டு காலத்துக்கு 1.25 சதவீத வட்டிக்கு பாரத ஸ்டேட் வங்கியிலும் திருப்பதி தேவஸ்தானம் முதலீடு செய்துள்ளது.

**<u>உலகம்</u>**

1.உலகின் பிரபல தகவல் பரிமாற்ற செயலியான வாட்சப்பில் தற்போது "ஸ்டேட்டஸ்" என்னும் மேம்படுத்தப்பட்ட புதிய வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**<u>விளையாட்டு</u>**

1.புனேவில் நடைபெற்ற இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா அணி 333 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை தோற்கடித்து அபார வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலியா 1-0 என முன்னிலை வகிக்கிறது.ஆட்ட நாயகனாக ஆஸ்திரேலிய அணி வீரர் ஓகீ◌ஃப் தேர்வு செய்யப்பட்டார்.

**<u>இன்றைய தினம்</u>**

1.நியூயார்க் உலக வர்த்தக மையத்தில் குண்டு வெடிப்பு நடைபெற்ற நாள் 26 பிப்ரவரி 1993.
2.இரண்டாவது பிரெஞ்சு குடியரசு அறிவிக்கப்பட்ட நாள் 26 பிப்ரவரி 1848.

**நடப்பு நிகழ்வுகள் – 27 பிப்ரவரி 2017**

**<u>இந்தியா</u>**

1.பிரதமர் நரேந்திரமோடி வானொலியில் "மனதின் குரல்" நிகழ்ச்சியில் நாட்டு மக்களுக்கு நேற்று உரையாற்றினார்.அவர் பேசியதில் முக்கியமாக நமது விவசாயிகள் கடுமையாக உழைத்து இந்த ஆண்டு 2700 லட்சம் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்துள்ளனர்.எனது நன்றியை விவசாய நண்பர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன் என நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

**<u>உலகம்</u>**

**<u>1.ஆஸ்கர் விருதுகள் 2017 பரிசு வென்றவர்களின் பட்டியல்</u>**

அமெரிக்காவின் லாஸ்ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள 'டால்பி' திரையரங்கில் 89வது ஆஸ்கர் விருது வழங்கும் விழா இன்று கோலாகலமாக தொடங்கியது.இந்திய நேரப்படி காலை 7 மணிக்கு விழா தொடங்கியது. ஜிம்மி கிம்மெல் இந்நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குகிறார்.சிறந்த ஆஸ்கர் துணை நடிகர் விருது மஹேசர்லா அலிக்கு வழங்கப்பட்டது. சிறந்த ஆடை வடிவமைப்பாளர் விருதை கொலின் அட்வுட் பெற்றுக்கொண்டார். சிறந்த ஒப்பனைக்கான விருது சூசைடு ஸ்வாடு படம் வென்றுள்ளது.சிறந்த ஆவணப் படம் விருதை ஓ.ஜே.மேட் இன் அமெரிக்கா படம் வென்றது. சிறந்த ஒப்பனை, சிகையலங்கார விருதை சூசைடு ஸ்குவாடு படம் வென்றுள்ளது.சிறந்த இயக்குனர் விருதை டாமின்

சாஸெல்லே (லா லா லேண்ட்) பெற்றுள்ளார்.சிறந்த தழுவல் திரைக்கதை விருதை மூன்லைட் | திரைக்கதை: பாரி ஜென்கிங்ஸ், கதை – டாரெல் ஆல்வின் மெக்கிரானி பெற்றுள்ளனர்.சிறந்த திரைக்கதை விருதை மான்செஸ்டர் பை தி ஸீ (கென்னத் லோனர்கன்) பெற்றுள்ளார்.சிறந்த பாடலுக்கான விருது சிட்டி ஆஃப் ஸ்டார்ஸ் (லா லா லாண்ட்) பெற்றுள்ளது.சிறந்த பின்னணி இசை விருது ஜஸ்டின் ஹர்விட்ஸ் (லா லா லாண்ட்) பெற்றுள்ளார்.சிறந்த ஒளிப்பதிவு விருதை லா லா லேண்ட் திரைப்படம் வென்றுள்ளது.சிறந்த எடிட்டிங் விருதை ஜான் கில்பர்ட் (ஹாக்ஷா ரிட்ஜ்) பெற்றுள்ளார்.கவுரவ ஆஸ்கார் விருதினை நடிகர் ஜாக்கிசான் பெற்றுக் கொண்டுள்ளார்.

**ஹாக்ஷா ரிட்ஸ் திரைப்படம்**

* சிறந்த குறும்படம் (லைவ் ஆக்ஷன் பிரிவு)- சிங்
* சிறந்த விஷுவல் எஃபெக்ட்ஸ்- தி ஜங்கிள் புக்
* சிறந்த தயாரிப்பு வடிவமைப்பு- டேவிட் வாஸ்கோ (படம்: லா லா லேண்ட்)

**லா லா லேண்ட் திரைப்படம்**

* சிறந்த குறும்படம் (அனிமேஷன் பிரிவு)- பைபர்
* சிறந்த ஒலிக்கலவை- கெவின் ஓ கானெல், ஆண்டி ரைட் (படம்: ஹாக்ஷா ரிட்ஜ்)
* சிறந்த ஒலித்தொகுப்பு- சில்வியன் பெல்மேர் (படம்: அரைவல்)
* சிறந்த ஒப்பனை மற்றும் சிகை அலங்காரம்- அலெஸாண்ட்ரோ பெட்ரோலாஸி மற்றும் கியோர்கியோ (படம்: சூசைட் ஸ்குவாட்)
* சிறந்த அயல்நாட்டு மொழி திரைப்படம்- தி சேல்ஸ்மேன் (ஈரான்)

**தி சேல்ஸ்மேன் திரைப்படம்**

* சிறந்த ஆவணப்படம்- ஓ.ஜெ.மேட் இன் அமெரிக்கா
* சிறந்த அனிமேஷன் திரைப்படம்- ஜூடோபியா

**ஜூடோபியா படத்தின் ஒரு காட்சி**

* சிறந்த ஆடை வடிவமைப்பு- காலின் அட்வுட் (படம்: பெண்டாஸ்டிக் பீஸ்ட்ஸ் அண்ட் வேர் டூ பைண்ட் தெம்)
* சிறந்த உறுதுணை நடிகை- வயோலா டேவிஸ் (படம்: பென்சஸ்)
* சிறந்த உறுதுணை நடிகர்- மஹெர்சலா அலி (படம்: மூன்லைட்)

**<u>விளையாட்டு</u>**

1.6 அணிகள் பங்கேற்ற 5-வது ஆக்கி இந்தியா லீக் (எச்.ஐ.எல்.) தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வந்தது.சண்டிகாரில் நேற்றிரவு நடைபெற்ற சாம்பியன் பட்டத்துக்கான இறுதி ஆட்டத்தில் கலிங்கா லான்செர்ஸ் (ஒடிசா) அணி 4-1 என்ற கோல் கணக்கில் தபாங் மும்பையை சாய்த்து முதல்முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.3-வது இடத்துக்கான ஆட்டத்தில் உத்தரபிரதேச விசார்ட்ஸ் அணி 5-4 என்ற கோல் கணக்கில் டெல்லி வேவ்ரைடர்சை தோற்கடித்து வெண்கலப்பதக்கத்தை

கைப்பற்றியது.

2.நியூசிலாந்து கிரிக்கெட் வீராங்கனை எமி சாட்டர்த்வைட் ஒருநாள் போட்டியில் தொடர்ந்து நான்கு சதங்கள் அடித்த முதல் வீராங்கனை என்ற பெருமையை பெற்றுள்ளார்.நியூசிலாந்தின் ஆக்லாந்தில் நடைபெற்ற நியூசிலாந்து – ஆஸ்திரேலிய பெண்கள் கிரிக்கெட் போட்டியின் முதல் ஒரு போட்டியில் எமி சாட்டர்த்வைட் இந்த சாதனையை புரிந்துள்ளார்.

**இன்றைய தினம்**

1.ஐக்கிய அமெரிக்காவில் அதிபர் ஒருவர் இருதடவைகளுக்கு மேல் போட்டியிட முடியாதவாறு அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்ட நாள் 27 பிப்ரவரி 1951.

2.பிரித்தானிய தொழிற்கட்சி அமைக்கப்பட்ட நாள் 27 பிப்ரவரி 1900.

3.ரேடியோ கார்பன் என்ற கரிமம்-14 கண்டுபிடிக்கப்பட்ட நாள் 27 பிப்ரவரி 1940.

**நடப்பு நிகழ்வுகள் – 28 பிப்ரவரி 2017**

**இந்தியா**

1.ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு புதிய தலைமை தகவல் ஆணையராக ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரியான குர்ஷீத் ஏ கனாய் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை ஜம்மு காஷ்மீர் கவர்னர் என்.என்.வோஹ்ரா பிறப்பித்துள்ளார்.

2.கேரள மாநில கவர்னராகவும், ஆந்திரபிரதேச ஐகோர்ட்டு நீதிபதியாகவும் பதவி வகித்த முன்னாள் மத்திய மந்திரி சிவசங்கர் (90) நேற்று காலமானார்.

3.கடந்த 57 ஆண்டுகளாக இந்தியக் கடற்படையில் சேவையாற்றிய இந்தியப் போர்க் கப்பலான ஐ.என்.எஸ் விராட் அடுத்த வாரத்துடன் ஓய்வு பெறுகிறது.இந்த கப்பல் 1959-ம் ஆண்டு தனது முதல் பயணத்தை தொடங்கியது.

4.உத்தரப்பிரதேச மாநில சட்டசபைக்கான ஐந்தாம் கட்ட தேர்தலில் 52 தொகுதிகளுக்கு நடைபெற்ற வாக்குப்பதிவில் 57 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**உலகம்**

1.இனி நீங்கள் உங்கள் பேஸ்புக் பக்கத்தில் பதிவேற்றும் லைவ் வீடியோவில் கூட 20 நொடி விளம்பர இடைவேளை வரும் என்று பேஸ்புக் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

2.அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்,அந்த நாட்டுக்கான இந்தியத் தூதர் நவ்தேஜ் சர்னாவை கடந்த பிப்ரவரி 25-ஆம் தேதி சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார்.டிரம்ப் பதவியேற்ற பிறகு, அவருடனான இந்தியத் தூதரின் முதல் சந்திப்பு இதுவாகும்.

**விளையாட்டு**

1.ஈரான் தலைநகர் டெஹ்ரானில் நடைபெற்று வரும் உலக மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் ஹரிகா துரோணவல்லி தொடர்ந்து மூன்றாவது முறையாக வெண்கலம் பதக்கம் வென்றார்.இவர் அரையிறுதி போட்டியில் டைபிரேக்கர் முறையில் சீனாவின்

டேன் ஜாங்கியிடம் தோல்வியடைந்தார்.எனவே வெண்கலப் பதக்கத்தோடு வெளியேறினார்.

**<u>சிறப்பு செய்திகள்</u>**

**<u>1.ஆஸ்கர் விருதுகள் 2017 பரிசு வென்றவர்களின் பட்டியல்</u>**

01) சிறந்த திரைப்படத்துக்கான விருது — மூன் லைட்.
02) சிறந்த இயக்குநருக்கான விருது — டேமியன் சாசெல் ( லா லா லாண்ட் என்ற திரைப்படத்தின் இயக்குனர் ).
03) சிறந்த நடிகருக்கான விருது — கேசே அப்லிக் ( மான்செஸ்டர் பை தி சீ என்ற படத்தில் நடித்தற்காக ).
04) சிறந்த நடிகைக்கான விருது — எம்மா ஸ்டோன் ( மூன் லைட் என்ற படத்தில் நடித்தற்காக ).
05) சிறந்த துணை நடிகருக்கான விருது — மகர்ஷா அலி ( மூன் லைட் என்ற படத்தில் நடித்தற்காக ).
இவர் ஆஸ்கார் விருது பெற்ற முதல் இஸ்லாமியர் எனும் சிறப்பைப் பெற்றார்.
06) சிறந்த துணை நடிகைக்கான விருது — வயோஹா டேவிஸ் ( பென்செஸ் என்ற படத்தில் நடித்தற்காக ).
07) சிறந்த பாடல் — லா லா லாண்ட் படத்தின் ” சிட்டி ஆப் ஸ்டார்ஸ் ‘ தேர்வு செய்யப்பட்டது. இதை ஜஸ்டின் ஹர்விட்ஸ், பென்ஜ் பாசேக், ஜஸ்டின் பால் எழுதியிருந்தனர்.
08) சிறந்த இசையமைப்பாளருக்கான விருது — ஜஸ்டின் ஹர்விட்ஸ் (லா லா லாண்ட் படம்).
09) சிறந்த ஒளிப்பதிவாளர் விருது — லினஸ் சான்ட்கிரேன் ( லா லா லாண்ட் படம் ).
10) சிறந்த எடிட்டருக்கான விருது — ஜான் கில்பர்ட் ( ஹேக்சா ரிட்ஜ் படம் ).
11) சிறந்த வெளிநாட்டு திரைப்படத்திற்கான ஆஸ்கார் விருது ‘தி சேல்ஸ் மேன் – The Salesman’ என்ற ஈரான் திரைப்படத்திற்கு வழங்கப்பட்டது. (இயக்குனர் – அஸ்கார் பர்ஹாதி).
12) சிறந்த அனிமேஷன் திரைப்படத்திற்கான ஆஸ்கார் விருது ‘ஜூத்தோப்பியா – Zootopia’ என்ற திரைப்படத்திற்கு வழங்கப்பட்டது.
13) ‘சூசைட் ஸ்குவாட் – Suicide Squad’ என்ற திரைப்படத்திற்காக கேட் மெக்கென்னன் மற்றும் ஜேசன் பேட்மேன் ஆகிய இருவருக்கும் சிறந்த ஒப்பனைக் கலைஞருக்கான விருது வழங்கப்பட்டது.
14) சிறந்த முழுநீள ஆவணப்படமாக எஸ்ரா எடில்மான் மற்றும் கரோலின் வாட்டர் லோ நடித்த “மேட் இன் அமெரிக்கா” தேர்வு செய்யப்பட்டு ஆஸ்கார் விருது வழங்கப்பட்டது.
15) “பென்டாஸ்டிக் பீஸ்ட்ஸ் அன்ட் வேர் டூ பைன்ட் தெம்” படத்தில் பணியாற்றிய கோலின் அட்வூட்டுக்கு சிறந்த ஆடை வடிவமைப்பாளருக்கா ஆஸ்கார் விருது வழங்கப்பட்டது.

16) “அரைவல்” படத்தில் பணியாற்றிய சில்வியன் பெல்லிமாருக்கு சிறந்த சவுண்ட் எடிட்டருக்கான ஆஸ்கார் விருது வழங்கப்பட்டது.
17) சிறந்த விஷுவல் எஃபெக்ட்டுக்கான ஆஸ்கார் விருது தி ஜங்கிள் புக் படத்துக்கு கிடைத்துள்ளது.
18) சிறந்த ஆவண குறும்படம் — ஓ.ஜே.மேட் இன் அமெரிக்கா.

**இன்றைய தினம்**

**1.இன்று தேசிய அறிவியல் தினம்.**

தேசத்தலைவர்கள் மற்றும் தியாகிகளைக் கொண்டாடுவது போல அறிவியல் மேதைகளும் போற்றப்பட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் 1987 – ஆம் ஆண்டு இந்தத் தேசிய அறிவியல் நாள் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.
ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிக்கோளை அடிப்படையாக கொண்டு இந்நாள் கொண்டாடப்படுகிறது. 2013-ம் ஆண்டிற்காக, “மரபணு மாற்றப்பட்ட பயிர்களும் உணவு பாதுகாப்பும்” (Genetically Modified Crops and Food Security) குறித்த கொள்கையை வலியுறுத்தப்படுகிறது.
இந்த தினம் கொண்டாடப்படும் வரலாறு மற்றைய தினங்களைப் போல அல்லாமல் வழக்கத்துக்கு மாறானது ஆகும். பொதுவாக தேசத்தலைவர்களின் பிறந்த மற்றும் நினைவு நாட்களே சிறப்பு நாட்களாக அறிவிக்கப்படும். இந்த இரண்டு வகையிலும் அல்லாமல் இந்திய மண்ணில் பிறந்து உலகம் போற்றும் வகையில் பல அரிய கண்டுபிடிப்புகளை ஆராய்ந்து வெளியிட்டவரும் சிறந்த இயற்பியல் மேதையுமான சர். சி. வி ராமன் தன்னுடைய நோபல் பரிசு பெற்ற ஆராய்ச்சி முடிவை வெளியிட்ட பிப்ரவரி 28 ம் தேதி தேசிய அறிவியல் தினம் என அறிவிக்கப்பட்டது.
சர். சி. வி. இராமன் தனது புகழ்பெற்ற ராமன் விளைவை (Raman Effect) இந்நாளிலேயே கண்டுபிடித்தார். இந்தக் கண்டுபிடிப்பு உலகளாவிய பெருமையை இந்தியாவிற்குப் பெற்றுத் தந்ததுடன் உயரிய விருதான நோபல் பரிசும் (1930) இவருக்கு கிடைத்தது. அந்நிகழ்வின் நினைவாகவும் அறிவியல் என்பது அடித்தட்டு மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கோடும் இந்திய அரசு இந்நாளைத் தேசிய அறிவியல் நாளாகப் பிரகடனப்படுத்தியது.
2.ஜோன் வெஸ்லி மெதடிஸ்த திருச்சபையை ஆரம்பித்த நாள் 28 பிப்ரவரி 1784.
3.ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட நாள் 28 பிப்ரவரி 1854.
4.வொலஸ் கரோதேர்ஸ் என்பவரினால் நைலோன் கண்டுபிடிக்கப்பட்ட நாள் 28 பிப்ரவரி 1935.

நன்றி...

**தொகுப்பு:- எண்ணமும் ஆக்கமும் சேகர் சுபா டி,**

**சுவாமி விவேகானந்தா TNPSC பயிற்சி மையம், காஞ்சிபுரம்...**

**7402021475, 7402021476, 9445705738**

**TNPSC OCEAN முகநூல் கல்விக்குழு.**




TNPSC OCEAN